பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

1/8/94 ஆவணி

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 16 01-08-94 திங்கட்கிழமை ஓசை 164

## மோட்டார் ஊர்திகளுக்கான 94-ம் ஆண்டு வரி அட்டை

எதிர்வரும் 03-08-94 (புதன்கிழமை) தொடக்கம் மோட்டார் ஊர்திகளுக்கான 94-ம் ஆண்டு வரி அட்டை யாழ். மாவட்டத்தில் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக வழங்கப்படவுள்ளது. அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் பிரிவிற்கென செயல்படும் அலுவலகங்களிலேயே தமக்குரிய வரி அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிறிதொரு உதவி அரச அதிபர் பிரிவிற்கு என (6ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் வன்முறைகள் குறித்து கொழும்பில் உயர்மட்ட மாநாடு

## மீண்டும் அதிகரிப்பது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

முன் எப்பொழுதும் இல்லாத வகையில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்திருப்பதை அடுத்து நேற்று முன்தினம் கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டில், நியமனப் பத்திரத் தாக்கலுடன் தொடங்கிய வன்முறை அடங்கி, பின் கடந்த சில நாட்களாக திரும்பவும் தீவிரமாகியிருப்பதாகவும் பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொலிசாருக்கு இதுவரை 800 தேர்தல் வன்செயல்கள் குறித்த புகார்கள் கிடைத்துள்ளனஇதுவரை பதினொரு பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழன் இரவு அனுராதபுர மாவட்டத்தில் கலாவெவ பகுதியில் முக்கிய அரசியல் பிரமுகரின்மெய்ப்பாதுகாவலர் ஒருவரால், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் புத்தளத்தில் பௌத்த பிக்கு ஒருவரும் கொல்லப்பட்டார் தேர்தல் வன்செயல்கள் தீவிரமடைந்து வருவதனால், பெரும் விசனமடைந்துள்ள அரசியல் கட்சிகள், தேர்தல் கண்காணிக்கப்படவேண்டியதன் அவசியத்தை அரசின் உயர்மட்டத்துக்கு உணர்த்தியிருக்கின்றனர்.

நியாயமான தேர்தல் கண் (6ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைக் களமாகும்

இம் மாதம் நடைபெறும் தேர்தல் களம் வன்முறைக் களமாகும் சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளன என வெரித்தாஸ் தெரிவித்துள்ளது.

இதுவரை தேர்தல் பிரசார வன்முறைகளில் மாத்திரம் பதினொரு பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர் என வெரித்தாஸ் மேலும் குறிப்பிட்டது.

## ஆயுதம் ஏந்தியது உண்மையே

88ஆம் ஆண்டு தேர்தலில் நாங்கள இந்தியப் படையுடன் இருந்த போது ஆயுதமேந்தியது உண்மை எனினும் ஏனைய அரசியற் கட்சிகள் சுதந்திரமாக பிரசாரம் செய்தன இவ்வாறு, ஈ. பி. ஆர். எல், எப். பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

88இல் இந்திய அமைதிப் படை, நடத்திய தேர்தலில் நீங்கள் ஆயுதபாணிகளாக இருந்தீர்கள் இப்போது ஈ.பி டி. பி. ஆயுதமேந்தியிருப்பதை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று ஐலண்ட் பத்திரிகை (6 ஆம் பக்கம் பார்க்க)

## ...நகரியில் புலிகள் தாக்கு... படைஅதிகாரி பலி

(பூநகரி)

...பூநகரி சிறிலங்கா இராணு... காவலரண் மீது தமிழீழ ...தலைப் புலிகள் நடத்திய ...தலில் இராணுவ உயர் ...காரி ஒருவர் பலியான ...ன் சிப்பாய் ஒருவர் காய ...டந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை வேளை விடுதலைப் புலிகள் நடத்திய இத் தாக்குதலின்போது பலியானவர் கப்டன் தரத்தைச் சேர்ந்தவர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஐ.நா. குழுவினர் நேற்று யாழ். ஆஸ்பத்திரி விஜயம்

...ாழ். வந்துள்ள ஐ.நா. ...தாபிமான செயற் திட்ட ...லாசகர் மல்கம் ரீடவுட் ... ஐ.நா. தொண்டர் ...வை அதிகாரி ரப்பான் ...ார் பர்மன் ஆகியோர் ... போதனா வைத்திய சாலைக்கு நேற்று விஜயம் செய்தனர்.

... வைத்தியசாலை நிலைமை களை நேரில் அவதானித்த அவர்கள் அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணையினால் ஏற்பட்ட சேதத்தையும் பார்வையிட்டனர்.

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்ததோடு, ஆயர் இல்லம், புத்தூர் வைத்தியசாலை என்பவற்றுக்கும் நேற்று அவர்கள் சென்றிருந்தனர்.

## பிரமநாதன்குள பகுதியில் இராணுவம் மீது தாக்குதல்

(வவுனியா)

...சங்குளத்திலிருந்து ...நாதன் குளச்சந்திக்கு ...னேறிய சிறிலங்கா இரா...வத்தினர் தம்பனைப்பக்க... முன்னேற முயன்ற... அவர்கள்மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது பூவரசங்குளத்திலிருந்து ஆறுமைல் தொலைவிலுள்ள பிரமநாதன் குளச்சந்திக்கு பத்து வாகனங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறிவந்தனர். பின்னர் அங்கிருந்து தம்பனைப் பக்கமாக அரைமைல் தூரம் முன்னேறிவந்தபோது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

15 நிமிடநேரம் நடைபெற்ற இத்தாக்குதலையடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## 3 அரசியல்வாதிகளுக்கு கொமாண்டோ பாதுகாப்பு

மூன்று பிரபல அரசியல்வாதிகளுக்கு, இராணுவத்... வர்த்தனா, ஐக்கிய தேசியக்...

## ஐ. தே. க. வேட்பாளருக்கு கிரிமினல் பண உதவி

(கொழும்பு)

ஐ. தே. கவின் வடகொழும்பு வேட்பாளர் ஒருவருக்கு கொள்ளுப்பிட்டி கருணபால என்ற கிரிமினல் ஒரு லட்சம் ரூபா பணம் கொடுத்து உதவியதாகவும் தேர்தலுக்கு இப்... கொண்டதாகவும் கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

மேலும் இக்கிரிமினல் சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்து நிதி உதவி அளிக்க முயன்றுவருவதாக...

லைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.
நேற்று முன்தினம் இடம்

அங்கிருந்து தம்பனைப் பக்கமாக அரைமைல் தூரம் முன்னேறிவந்தபோது இவர்கள்

ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

# ஆனையிறவு சமரில் வீரச்சாவடைந்த மாவீரருக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

(தென்மராட்சி)
ஆகாய கடல் வெளிச்சமரில்
ர் ச் சா வைத் தழுவிக்
ண்ட மாவீரர்களின்
ஆண்டு நினைவஞ்சலி
வு நேற்று மாலை 5 மணி
கொடிகாமம் ஆ, க.வெ.
ரர் நினைவாலயத்தில்
பெற்றது. இந்நிகழ்வில்
திரளான பொதுமக்
ா வீரர்களுடைய
ருவப்படத்திற்கு அஞ்
சலுத்தினர்.
வில் நினைவாலய ஈகச்
னை தமிழீழ மாவீரர்
மனைப் பொறுப்பாளர்
பொன்தியாகம் ஏற்றி

வைத்தார். தேசியக் கொடியினை தென்மராட்சி சிறப்புப் பொறுப்பாளர் திரு. கானகன் ஏற்றி வைக்க நினைவாலய நினைவுக் கல்லுக்கு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி மலர்மாலை அணிவித்து ஈகச்சுடரினை ஏற்றி வைத்தார். இந் நிகழ்வினை அடுத்து மாவீரர்களின் நினைவுருவப் படத்திற்கு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகச் சுடரினை ஏற்றி மலர் மாலையினை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நினைவாலயத்திறகு முன்னர் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் தென்மராட்சிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கலைவாணன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. இதில் திரு. பூபாலசிங்கம் ஐயா, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், அரசியற்துறை நடுவப்பணியகத்தைச்சேர்ந்த அரசண்ணா, திருமலை மாவட்ட அரசியற்துறைபொறுப்பாளர் திரு. தங்கன், யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உணவுப்பங்கீட்டு நடவடிக்கையை பிரதேச செயலரிடம் ஒப்படைக்கவும்

## கூட்டுறவுச்சபை தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
லநோக்குக் கூட்டுறவுச்
ங்களுக்கான உணவுப்
டு பிரதேசச் செயலாளர்
டம் ஒப்படைக்கப்பட
ண்டும் என யாழ். மாவ
கூட்டுறவுச்சபைத் தலை
வை. செந்திநாதன் தெரி
ள்ளார்.

திகார பரவலாக்கலின்
கூட்டுறவு நிறுவனங்
ள நிர்வகிக்கும் பொறுப்பு
தேச செயலாளர்களிடம்
டைக்கப்பட்டு அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி
யாளர்களாகவும் செ
தனால் மேற்படி
பங்கீடும் அவர்களி
ஒப்படைக்கப்பட
என அவர் மேலும்

தெரிவித்துள்ளார்.

அரச அதிபர்கள், சமூக சேவைத்திணைக்களம் ஆகியவற்றின் வேண்டுகோள்களுக்கேற்ப சில நிவாரண உணவுப் பொருள் விநியோகங்களை சங்கங்கள் மேற்கொ

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் வசதி இல்லாமையால்

# கூட்டுறவு சங்கங்களின் 10 கோடி பணம் முடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கூட்டுறவுக் கோட்டங்களுக்கும் உரிய 10 கோடி ரூபா பணம் கொழும்பில் முடங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய பொருள் கொள்வனவிற்காக இப்பணத்துடன் கொழும்பு சென்றவர்கள் கப்பல் வசதி இல்லாத காரணத்தினால் பொருள்களை எடுத்து வருவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்,

சுமார் ஒன்றரை மாதகாலமாக மேற்படி பணத்துடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மூன்று பிரபல அரசியல்வாதிகளுக்கு, இராணுவக் கொமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி தலைவி சந்திரிகா குமாரணதுங்கா, மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தனா, ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் காமினி திசாநாயக்கா ஆகியோருக்கு இராணுவ கொமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரூபா பணம் கொடுத்து உதவியதாகவும் தேர்தலுக்கு இப்பணத்தை பயன்படுத்துமாறு அக்கிரிமினல் வேண்டிக்கையும் சந்தித்து நிதி உதவி அளிக்க முயன்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி வேட்பாளர்கள் ஆயுதம் வைத்திருக்க தடை

(வவுனியா)

வன்னிப் பகுதியில் உள்ள எந்த குழு உறுப்பினர்களோ அல்லது வேட்பாளர்களோ ஆயுதங்கள், வெடிகுண்டுகள் ஆகியவற்றைக் கொண்டு செல்ல பிரிகேடியர் பல்லேகல தடைவிதித்துள்ளார்,

இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார் இதேவேளை, வவுனியா நகரில் பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து வாகனங்களை சோதனையிட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் வவுனியா நகரில் நடந்த சோதனையில் ரி-56, ரி-81 ஆகிய இரு துப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வன்செயல் தலைதூக்கி தேர்தல் குழம்பலாம்

## சுதந்திரக் கட்சி பொதுச்செயலர்

(கொழும்பு)

தேர்தல் வேளையில் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தும் விதத்தில் ஏற்பாடுகள் நடக்கின்றன, இந் நிலையில் நீதியான தேர்தல் நடைபெறாது போகலாம் என சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று எதிர்க் கட்சித் தலைவியின் வாசஸ்தலத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஊரடங்குச்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. குழுவினரின் ஆயுதங்கள் மீள பெறப்படும்

## பாதுகாப்பு உயரதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தேர்தலில் போட்டியிடும் ஈ. பி. டி. பி. குழுவினரிடமிருந்து ஆயுதங்களை மீளப்பெறுவது தொடர்பாக சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுய பாதுகாப்பிற்காக ஆயுதங்களை வைத்திருப்பதாக சில வேட்பாளர்கள் கூறுவதை ஏற்கமுடியாது என தெரிவித்த அவர்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்ற ஒப்புதலின்றி எயார் லங்காவுக்கு நிதி

## விசாரணை நடத்த குழு நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்ற ஒப்புதலில்லாமல் பல நூறு மில்லியன் ரூபா, எயார் லங்காவுக்கு வழங்கப்பட்டது தொடர்பாக திறைசேரியின் நடவடிக்கை விசாரணைக்குள்ளாக்கப் பட்டுள்ளது.

எயார் பஸ் கொள்வனவிற்காகவே, இவ்விதமான சட்ட விரோதமாக பணம் கொடுக்கல்செய்யப்பட்டதாகத்தெரியவருகிறது.

இதேவேளை, முன்னாள் திறைசேரியின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், மருத்துவ சிகிச்சையின் பின் அறிவிக்கப்பட்டதுபோல் இம்மாத முடிவில் நாடு திரும்பமாட்டாரெனவும் தெரியவருகிறது.

மேற்படி, பணம் கொடுப்பனவுக்கான தீர்மானங்கள், பாஸ்கரலிங்கம் திறைசேரியின் செயலாளராக இருந்தபோதே எடுக்கப்பட்டன எனவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக, ஐலண்ட் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியின்படி,

எயார் லங்கா நிறுவனத்திற்காக இரண்டாவது தொகுதி எயார்பஸ்விமானங்களைபெற்றுக்கொள்வதற்காக முந்நூறு மில்லியன் ரூபாவை வெளிநாட்டு வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்வது தொடர்பாக ஆராய சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா உயர் மட்டக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

# தேர்தல் முடிவு வரமுன் தப்பி ஓட ஊழல் அரசியல்வாதிகள் முயற்சி

## ஐரோப்பிய நாடு செல்லும் விமானங்களில் ஆசனமில்லை

(கொழும்பு)

பிரபல அரசியல் வாதிகள், தொழிலதிபர்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் தேர்தல் முடிவுகள் வரமுன் பே நாட்டை விட்டுச் செல்வதற்காக விமானப் பயணச் சீட்டுக்களை பதிவு செய்து வருகின்றனர் என சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

பிரதான விமான முகவர்கள் ஆகஸ்ட் மாதத்திற்குரிய விமானப் பயணச் சீட்டுக்கள் ஏறக்குறைய முழுமையாக பதிவு செய்யப்பட்டு விட்டன எனக் கூறுகின்றனர்.

எயார்லங்காஅதிகாரிகளும், புதிய அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்கலாமெனவே இவர்கள் வெளியேறிச்செல்ல முயல்கின்றனர் என ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஐரோப்பிய, ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான விமானப் பயணச் சீட்டுக்கள் யாவும் பதிவு செய்யப்பட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்குண்டு

கறுப்புப் பேட்டுக்குஞ்சுகள் பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா பதி மானிப்பாய்
(8963)

## ந. சுந்தரம்பிள்ளையின் 'அக்கரைச் சீமையில்'

இங்கிலாந்திற்குச்செல்லாமலேயே அந்த நாட்டையும் இலண்டன் மாநகரத்தையும் கண்முன் காட்சிப்படுத்த முனைந்துள்ளார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார் :- ஈழநாதம் வெள்ளி மஞ்சரியில் வவுனியா திலீபன்
(8898)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ரைக்டர் கலப்பை (AUSTRALIAN) விற்பனைக்குண்டு தொடர்பு:-நீதிராஜா, தபால் கந்தோர் வீதி சாவகச்சேரி
(8976)

## வீதி சீர்கேடு

(யாழ்ப்பாணம்)
கண்டி வீதியையும் கேரதீவு வீதியில் தச்சந்தோப்பு சந்தியையும் இணைக்கும்புகையிரத நிலைய வீதி பலகாலமாக திருத்தப்படாதுசீரழிந்தநிலையில காணப்படுகிறது. குன்றும் குழியுமாக உள்ள இவ்வீதி பயன்படுத்த முடியாத நிலைக்கு வந்துள்ளதால் அதனூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

## தூதுவராக திலகரட்ண

(கொழும்பு)
வெளிநாட்டுச் செயலாளராக தற்போது செயலாற்றி வரும் பேர்னாட் திலகரட்ண வெளிநாடு ஒன்றில் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். இவர் அநேகமாக இந்தியாவில் தூதுவராக நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

வெளியுறவு அமைச்சின் புதிய செயலாளராக வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக தற்போது பணியாற்றும்


யாழ்.பல்கலைக்கழக(வெளிவாரி)விரிவுரைகள்
கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாட நெறிகளுக்கான
புதிய பிரிவு
விரிவுரைகள் 7-8-94-ல் ஆரம்பமாகின்றன.

★ கலை முதற் தேர்வு (G.A.Q)
★ வணிக முதற் தேர்வு (First in Com.)

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-10010)



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 95 கணக்கியல்
Evening Class செவ்.வியாழன் 4.00 to 6.00
ஆரம்பம்:- 2.8.94 செவ்வாய்
Week end Class சனி, ஞாயிறு 12.00 to 2.00
ஆசிரியர்: S. K. பிரபாகரன்
★ பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்
★ இலவச வினா விடை வகுப்புக்கள்.
மாதாந்த பரீட்சைகள் நடாத்தப்படும்.
(சி-10016)



இந்த வாய்ப்பை பயன்படுத்துங்கள்
நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி (இல. 02)
அறவழிப் போராட்டக் குழுவினால்
நடாத்தப்படவுள்ள
"நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி"
யில் பங்கு கொள்ள விரும்புவோரிடம்
இருந்து விண்ணப்பங்கள்
வரவேற்கப்படுகின்றன.

திறமையும், அனுபவமுமுள்ள - பிரபல
போதானாசிரியரின் வழிகாட்டலில்
பயிற்சி வாரத்தில் மூன்று தினங்களாக
நான்கு மாதங்கள் நடைபெறும்.
பயிற்சி இடம்:அறவழி பயிலகம், கைதடி
-நுணாவில்
பயிற்சி ஆரம்பம்: 25-08-1994
பயிற்சி பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை
16-08-94 க்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும.
செயலாளர்,
NVDAG அறவழிப் போராட்டக்குழு


# என் கணவரின் கோரிக்கை பொ. ஐ. மு.விடம் உண்டு

## சிறிமானி அத்துலத்முதலி விளக்கம்

(கொழும்பு)
என் கணவரின் வேலைத் திட்டங்களை பொது ஜன ஐக்கிய முன்னணி ஏற்று செயற்பட முன் வந்துள்ளது. இதனாலேயே நான் அம்முன்னணியில் இணைந்து தேர்தலில் குதித்துள்ளேன் என சிறிமானி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

மதவாச்சியில் நடைபெற்ற முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர், எனது கணவர் ஐ தே. கவில் இருந்த போது அக் கட்சியின் வேலைத் திட்டங்களில் மாற்றங்கள் தேவை என்பதை உணர்ந்தார் அதற்காக செயற்பட்டார். அவரது முயற்சி பலனளிக்கவில்லை. இதனால் என் கணவரும் அவரின் குழுவினரும் ஐ. தே. க தலைமையினால் வெளியேற்றப்பட்டனர். அவரின் வேலைத் திட்ட கொள்கைகளை பொது ஜன ஐக்கிய முன்னணி தனது வேலைதிட்டங்களாக கொண்டுள்ளது இதன் காரணத்தால் கணவரின் வழியில் செல்வதற்கு அதனை ஆதரித்து செயற்பட அக்கட்சியில் போட்டியிடுகிறேன் என்றார்.


பயிலுனர் லிகிதர் தேவை

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண தரம் அல்லது உயர் தரம் பயிற்சி பெற்றவர்களிடம் இருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் பயிலுனருக்கு பொருத்தமான படி வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 10-08-1994

அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(10009)


# நீங்காத நினைவுகளில் மூன்றாம் ஆண்டு

தாயின்மடியில்:
10-11-1973



மண்ணின்மடியில்:
05-08-1991

லெப். நித்தி
(கிருஷ்ணபிள்ளை தவரத்தினம்)
திதி: 01-08-1994

# நினைவு கூருகின்றோம்...

## 01-08-1994...

1989-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-கச்சக் கொட்டைத்தீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனாள நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் ரஜனி** (சின்னத்தம்பி புஸ்பராஜா - 2-வது கொலனி, கந்தளாய்-திருமலை)

1990-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**வின்சன்** (எரிக்டன் ஜோன்சன்-3-ம் கட்டை, செல்வநாயகபுரம்-திருமலை)

முல்லைத்தீவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண்ணடைந்து மருத்துவமனையில் எமைப்பிரிந்த,

**காண்டீபன்** (சுப்பையா பாலகிருஷ்ணன் - தாவடி-யாழ்)

1991-ம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய.

**லெப். உபாலி** (இராசதுரை பிரபாகரன் -2-ம் கண்டம், முத்தையன்கட்டு-முல்லைத்தீவு)

**சுதன்** (இராசரத்தினம் ஜீவகுமார்-பூவரசங்குளம்-வவுனியா)

**2-ம் லெப். கஸ்ரோ** (நடேசபிள்ளை சுடாகரன்-162 ம் கட்டை, கண்டி வீதி-கிளிநொச்சி)

வடமராட்சி தாக்குதல் படைப்பிரிவு தளபதி,

**மேஜர் கணேஷ்** (வைத்திலிங்கம் துரைவடிவேல்-தொண்டமானாறு, உடுப்பிட்டி-யாழ்)

**லெப். கணன்-கணாட்** (நாகமுத்து கலியுகவரதன்-தாளையடி, உடுத்துறை-யாழ்)

**அலெக்ஸ்** (பூபாலசிங்கம் பவளகாந்தன் - கச்சார் வெளி-பளை)

**அசோக்** (கதிர்காமநாதன் ரகுநாதன்-சங்கத்தார்வயல், இயக்கச்சி பளை)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா - இந்தியப் படைகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10015)

# 3 ஆம் ஆண்டு நினைவாக

புதிய செயலாளராக வெளி நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக தற்போது பணியாற்றும் இவர் ஆகஸ்ட் முதல் நியமிக்கப்படவுள்ளார்.

க்கு அனுப்பவும்.

NVDAG

செயலாளர்,
அறவழிப் போராட்டக்குழு
த. பெ இல. 2
சாவகச்சேரி.

(8979)

# கேள்வி அறிவித்தல்

ஐ. டி. ஏ. (உலக வங்கி) வேலைகள் வடக்கு - கிழக்கு மாகாணசபை
பொறியியல் வேலைகள் அமைச்சு

பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகம்
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகத்தினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளரினால் 1994ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17-ம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலைகளின் விபரம் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|
| 1. யா-மூளாய் சைவப்பிரகாச வித், | ரூபா 100 00 | ரூபா 400.00 |
| 2. யா-அராலி சரஸ்வதி வித். | ,, 250.00 | ,, 850 00 |
| 3 யா-உடுவில் மான்ஸ் கல்லூரி | ,, 250 00 | ,, 650.00 |
| 4. யா-கெற்பலி அ.த.க. பாடசாலை | ,, 250.00 | ,, 550 00 |
| 5. யா-கைதடி விக்னேஸ்வரா கல்லூரி | ,, 250 00 | ,, 1400 00 |
| 6 யா-மந்துவில் றோ. க. த. க பாடசாலை | , 250.00 | ,, 1050.00 |
| 7 யா-கல்வயல் சைவப்பிரகாச வித். | ,, 250.00 | ,, 1050.00 |

மேற்படி வேலைகளுக்கு ரூபா இரண்டரை லட்சத்திற்கு (250,000/-) குறையாது இக்ராட் (ICTAD) ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் இக்கேள்விக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றவர் ஆவார்கள்.

வேலைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப்பணத்தை நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 1994ஆம் ஆண்டு ஆவணி மாதம் 12-ம் திகதி 12.00 மணிவரை பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விபரங்களை பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**எம். ஏ. பிரான்சிஸ்**
பாடசாலைக் கட்டிட வேலைகள் பொறியியலாளர்
பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகம்
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் (சி-10008)

(கிருஷ்ணபிள்ளை தவரத்தினம்)
திதி: 01-08-1994

1991 இல் ஆனையிறவு ஆ. க. வெ. போரில் இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

நித்தி வீதி வரணி, (8982) -குடும்பத்தினர்

## 3 ஆம் ஆண்டு நினைவாக



தாயின் மடியில்:
15
07
1970


தாயக மண்ணில்:
01
08
1991

## வீரவேங்கை சுதன்

உள்ளத்தில் கோயில் கொண்ட - எம்
இன்னுயிர் ஒளி விளக்கே
போனாயே உப்பளத்தில் புயலாக
வாகை சூடவேண்டிய நீ
மலர் மாலை சூடி வந்தாயே......
உடலோடு போகவில்லை உன் - வீரம்
வரலாற்று நாயகனே நிழலாக
வழி நடத்த தொடர்கின்றோம் உன் பின்னே.

முகவரி:-
செட்டிகுளம்,
வவுனியா. (8983)

- குடும்பத்தினர்



## வீரவேங்கை அலெக்ஸ்

(பூபாலசிங்கம் பவளகாந்தன்)

தோற்றம்: 20 - 08 - 1975
வீரச்சாவு: 01 - 08 - 1991

ஆற்றல்மிகு தலைவன் ஆணை கேட்டு
ஆர்வமுடன் ஆனையிறவு களம் அடைந்து
ஈட்டினீர் ஈடிணையற்ற புகழ்தனை
ஏற்றி நிற்கின்றோம் நெஞ்சினிலே நின் நினைவை.

இவருடன் ஆ. க. வெ. தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களுக்கு எம் கண்ணீர் அஞ்சலிகள்.

கச்சார் வெளி,
பளை. (01-08-94) (8971)

உம் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# பொருளியல் A/L

## பரீட்சைக்கான வழிகாட்டல் முறைகள்

இக்கட்டுரையானது பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில்,

i பரீட்சை முக்கியத்துவம்
ii பாட முக்கியத்துவம்

என்ற இரு பகுதிகளையும் பரீட்சைக்கு வழிகாட்டும் வகையில்

iii வினாத்தாளின் அமைப்பு
iv பரீட்சை நுட்பங்கள்
v விசேட கவனத்திற்குரிய விடயங்கள்

ஐந்துஉபதலைப்புக்களின் கீழ் ஆராயப்படுகின்றன.

### I
### பரீட்சை முக்கியத்துவம்

இன்று க. பொ. த. உயர்தரப் பரீட்சையானது பல்கலைக்ழகக் கல்வி பெறுவதற்குப் பொருத்தமானவரைத் தெரிவு செய்யும் பரீட்சையாக மட்டுமன்றி, சான்றுறுதிப்படுத்தும் பரீட்சை என்ற வகையிலும் பிரபல்யம் பெற்றுள்ளது.

★ நடுத்தர மட்டத்திலான தொழில்கள் பலவற்றில் நியமனம் பெறுவதற்குக் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்கள் கட்டாயமாகச் சித்தி பெற்றிருத்தல் அவசியமாகவுள்ளது.

★ மேலும் சில தொழில் சார் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கு க. பொ. த. உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ் அடிப்படைத் தகைமையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய காரணங்களால் இப்பரீட்சையில் முன்னரிலும் பார்க்க மாணவர்கள் கூடிய அக்கறை காட்ட வேண்டியுள்ளது. எனவே பல்கலைக்கழக அனுமதிக்கு வெட்டுப்புள்ளி உயர்வாக நிர்ணயிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் மாணவர்கள் இப்பரீட்சையில் ஒவ்வொரு புள்ளிகளையும் பெற்றுக் கொள்வதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

### II
### பாட முக்கியத்துவம்

இன்று பல்வேறு தொழில் வாய்ப்புக்களுக்கும், தொழில் சார் பாடநெறிகளை மேலும் கற்பதற்கும் உதவுகின்ற ஒரு பாடமாக பொருளியல் விளங்குகின்றது. எனவேதான் உயர்தர வகுப்புக்குரிய பாடங்களில் மிகக்கூடியளவு மாணவர்கள் கற்கும் பாடம் என்ற பெருமையைப் பொருளியல் பெறுகின்றது.

இவ்வகையில் இப்பாடநெறியில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்வது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு மிகக்கூடியளவில் பயன்படுவதாகும்.

பரீட்சை பற்றிய சரியான வழிமுறைகளை அறியாத காரணத்தால் மிக கவனமெடுத்து நன்றாகப் படித்த மாணவர்கள் குறைந்த பெறுபேறுகளை எடுக்கும் நிலை காணப்படுகிறது. உண்மையில் பரீட்சையில் இயன்றளவு அதிக புள்ளிகளைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதில் அவதானமும், திறமையும் தேவையாகும். எனவே குறிப்பாகப் பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களைக் கவனத்தில் கொண்டு பொருளியல் பரீட்சை தொடர்பான வழிகாட்டல்கள் அடுத்து வரும் பகுதிகளில் தரப்படுகின்றது.

### III
### வினாத்தாளின் அமைப்பு

மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட இரு வினாத்தாள்களை உள்ளடக்கிய இப்பாடத்தின் ஒவ்வொரு வினாத்தாளும் 12 வினாக்களைக் கொண்டது. வினாத்தாள் ஒவ்வொன்றும் 6 வினாக்களைக் கொண்ட இருபகுதிகளை உள்ளடக்கியதாகும். மாணவர்கள் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து ஒரு வினாத்தாளில் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும். பெரும்பாலும் வினாக்கள் அமைப்புரீதியானதாகவே அமைகின்றன. இவ்வினாக்கள் 2 இல் இருந்து 10 வரையான உப பிரிவுகளைக் கொண்டதாகவும், உபபிரிவுகள் ஒவ்வொன்றும் 2 முதல் 12 வரையான புள்ளிகளைக் கொண்டவையாகவும் அமைகின்றன. ஒரு சில சந்தர்ப்பங்களில் மட்டும் 20 புள்ளிகளையும் கொண்ட தனி ஒரு வினா இடம் பெற்றுள்ளது.

**வே. கருணாகரன்**
**B. A. (Hons) Dip. in Ed.**

பொருளியல் 1 வினாத்தாளில் இடம் பெறும் வினாக்களின் விடய உள்ளடக்கம் வருமாறு:

வினா இல: விடயம்

பகுதி I

1 ★ பொருளியல் அடிப்படை எண்ணக்கருக்கள்: அருமை, பொருளாதாரப் பண்டம், இலவசப் பண்டம், அமயச்செலவு, பொருளியல் இலாபம்.
★ உற்பத்தி இயல்தகவு வளையி
2 ★ அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்
★ பொருளாதார முறைமைகள்
3 ★ சந்தைகள்
4 ★ கேள்வி, நிரம்பல்
5 ★ நெகிழ்ச்சி
6 ★ சந்தைச் சமநிலை

பகுதி II

7 ★ உற்பத்திக் காரணிகள்
8 ★ தேசியவருமானம்
9
10 ★ பணம்
11 ★ வங்கி
12 ★ விலைச் சுட்டெண்
★ பணவீக்கம்.

பொதுவாக பொருளியல் I வினாத்தாள் பொருளியலின் எளிய கோட்பாட்டு எண்ணக்கருக்களைப் பற்றி மாணவர்களது அறிவு, கிரகித்தல், பிரயோகம் என்பவற்றைப் பரீட்சிப்பனவாகவே அமையும்

பொருளியல் II வினாத்தாளில் இடம் பெறும் வினாக்களின் விடய உள்ளடக்கம் வருமாறு;

வினா இல: விடயம்

பகுதி I

1
2 ★ அரசாங்க வரவு செலவுத் திட்டம்
3
4 ★ சென்மதி நிலுவை
5
6 ★ வெளிநாட்டு வர்த்தகம்

பகுதி II

7 ★ சனத் தொகை
8 ★ வேலையின்மை
9 ★ பொருளாதார வளர்ச்சி
10 ★ பொருளாதார அபிவிருத்தி
11 ★ சுதந்திரத்தின் பின் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டமாற்றங்கள்
12 ★ விவசாயம்
★ கிராமியக் கடன்
★ கைத்தொழில்
★ அண்மைக்கால அபிவிருத்தித் திட்டங்கள்

பொதுவாக பொருளியல் II வினாத்தாள் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையை மையமாக வைத்து, பிரயோகப் பொருளியல் பற்றிய மாணவர்களின் அறிவு, கிரகித்தல், ஆய்வுத்திறன் என்பவற்றைப் பரீட்சிப்பனவையாக அமையும்.

குறிப்பு :-

ஒவ்வொரு வினாத்தாளிலும் பகுதி I, பகுதி II விடய உள்ளடக்கத்தில் மாற்றமிருக்காது. ஆனால் அப்பகுதிக்கான வினா இலக்க ஒழுங்கில் சில மாறுதல்கள் இடம் பெறுவதுண்டு.

### IV
### பரீட்சை நுட்பங்கள்
### Examination Techniques

**1 நேரஒதுக்கீடு:**

பரீட்சைக்குரிய 3 மணித்தியாலங்களில் 10 - 20 நிமிடங்களை 5வினாக்களைத் தெரிவு செய்யவும். 32 நிமிடங்களை ஒவ்வொருவினாவையும் வாசித்து விடை எழுதவும். 5 நிமிடங்களை விடைத்தாளை மீள ஒழுங்குபடுத்துவதற்கும் ஒதுக்குக.

**2 சுட்டெண், பாடம் குறித்தல்:-**

பரீட்சை மண்டபத்தில் விடைத்தாள்கள் தந்தவுடனேயே ஒவ்வொரு தாளிலும் உங்கள் சுட்டெண், பாடம் என்பவற்றைக் குறிப்பிடுக. பின்பு மேலதிகமாக விடைத்தாள்கள் பெறும்போதும் அவ்வாறே செய்க.

**3 வினாக்களைத்தெரிதல்**

இது மிக முக்கியமானது. 12 வினாக்களில் 5ஐ மட்டுமே தெரிவுசெய்யவேண்டும். 7ஐத் தவிர்க்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக பல மாணவர்கள் அவசரப்பட்டு வினாக்களை தெரிவுசெய்து 5இற்கு விடையளித்தபின் திருப்திப்படாது வேறு ஓர் வினாவை மேலதிகமாக தெரிவு செய்து எழுத முற்பட்டு அவதிப்படுகின்றனர். இதன் காரணமாக ஏற்கனவே எழுதிய விடைகளை திரும்பப் பார்க்கவும், ஒழுங்காக விடைத்தாள்களை இணைக்கவும் நேரமில்லாத நிலையில் முழுமையான புள்ளிகளைப் பெறமுடியாதநிலை ஏற்படுகிறது. எனவே எக்காரணம் கொண்டும் 6 ஆவது வினாவிற்கும் விடை எழுத முயற்சிக்க வேண்டாம்' ஆரம்பத்திலேயே எல்லா வினாக்களையும் தெளிவுறவாசித்தறிக கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளினடிப்படையில் இதில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற முடியும் எனக்கருதும் 5 வினாக்களை இருபகுதியிலிருந்தும் 2வினாக்களாவது வரும் வண்ணம் தெரிவுசெய்க.

சரியாகக் கணிக்கமுடியுமெனக்கருதினால் வரைபடங்கள் கணிப்புக்கள் உள்ள வினாக்களையும், இடைவெளிநிரப்பும் வினாக்களையும் தெரிவு செய்வது குறுகிய நேரத்தில் அதிக புள்ளி பெற உதவும்.

**4 இலகுவில் இருந்து கடினத்திற்கு:-**

முதலில் இலகுவான வினாவுக்கு விடை எழுதுக்.
உ-ம்:- இடைவெளிநிரப்புதல் பின்னர் கடினமான வினாக்களுக்கு விடைஎழுதுக.

**5 வினா இலக்கமிடல்**

ஒவ்வொரு வினாவுக்கும் அதன் உபபிரிவுக்கும் உரிய இலக்கமிட்ட பின்பே விடை எழுதத் தொடங்க வேண்டும்.

**6 வினாவை விளங்குதல்**

ஒவ்வொரு விடையையும் எழுத முன்னர் வினாவைமுழுமையாக வாசித்து விளங்கிக் கொண்ட பின்னரே, விடையின் ஒழுங்கமைப்பைத் தீர்மானித்து விடை எழுத வேண்டும்.

**7 விடையின் பருமன்**


ஒவ்வொரு பிரிவு வினாவுக்கும் கொடுக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சுருக்கமாகவோஅல்லது விளக்கமாகவோ விடை எழுதுக

**8. எழுத்து**

விடைகள் ஒழுங்காகவும், கவர்ச்சிகரமாகவும் இருக்கத்தக்கதாக இயன்றவரை தெள்வான எழுத்தில் எழுதுக, நல்ல எழுதுகருவிகளை உபயோகிக்குக.

**9. இடைவெளிவிடல்**

★ வினாவின் ஒவ்வொரு பிரிவுகளுக்குமிடையில் இடைவெளிவிடுக. பின்பு அது தொடர்பாக ஏதாவது எழுத வேண்டியிருப்பின் எழுதலாம்.



# மாணவர் அரங்கு

படும் ஒற்றுமைகள், வேற்றுமைகள் என்பவற்றை ஒழுங்காக எடுத்துக் காட்டவேண்டும்.

**C சாதக, பாதக விளைவுகள்**

பின்வரும் வினாப் பதங்கள் தரப்படின் சாதகமான, பாதகமான விளைவுகள் இரண்டையும் கவனத்தில் கொண்டு விடை எழுதவேண்டும்.

★ மதிப்பிடுக
★ விமர்சிக்குக
★ பரிசீலிக்குக
★ ஆராய்க
★ விளைவுகள்
★ பாதிப்புக்கள்

**D ஏற்றுக்கொள்வீரா?**

என்றவகையிலான வினாக்களுக்கு முதலில் 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதைக் குறிப்பிடுக. ஏனெனில் அவற்றுக்குத் தனியாகப் புள்ளி வழங்கப்படும்.

பின்பு அடுத்த வரியில் ''அதற்குரிய காரணங்கள் வருமாறு'' எனக் குறிப்பிடுக. அதன் கீழ் இலக்கமிட்டு ஒன்றன் கீழ் ஒன்றாக காரணங்களை நிரல்படுத்தி எழுத வேண்டும். திரட்டி எழுதக் கூடாது.

**E வரைபடங்கள்**

★ 'வரைபுத்தாளில் வரைக' எனக் கேட்கப்பட்டால் மட்டும் வரைபுத்தாளில் வரையப்பட வேண்டும். ஏனையவை சாதாரண விடைத்தாளில் வரையப்படலாம். அளவுத் திட்டம், குத்தச்சு, கிடையச்சு குறிப்பிடும் அம்சங்கள், வளையிக்குரியகுறியீடு போன்றன கவனிக்கப்பட வேண்டும் வளையிகளை சரியாக வரையாதமையால் குறைந்த புள்ளிபெற நேரிடுகிறது.

உ+ம் 50% நகர்வு.

★ வரைபடங்களுடன் விளக்குக எனக் கேட்கப்பட்டால் கட்டாயமாக வரைபடங்களுடன் விளக்கப்பட வேண்டும்.

★ வரைபடங்கள் கேட்கப்படாத சில வினாக்களுக்கும் தேவைப்படுமிடத்து வரைபடங்களை வரைந்து விடை அளிக்கப்படவேண்டும். ஏனெனில் அவற்றுக்கென தனியான புள்ளிகள் வழங்கப்படும்.

★ வரைபடங்களை விடையில் விளக்கத்துடன் தொடர்புபடுத்தல் வேண்டும். அல்லது வரைபடத்திற்குரி புள்ளி வழங்கப்படமாட்டாது.

**F கணக்குகள்**

கணிப்புக்களை முழுமையாககாட்டுக. செய்கைத்தாள் இருப்பின் இணைக்குக. வினா இலக்கங்களுக்குரிய கணிப்புக்களை அவ் இலக்கத்தின் கீழ் காட்டுக.

★ 'சென்மதிநிலுவை நடைமுறைக் கணக்கின் மாதிரி

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில்

## பரீட்சைக்கான வழிகாட்டி

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை எமது ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் ஓர் பரீட்சையாக அமைந்துள்

விலை என்று கேட்கும் போது ஐந்துக்கு முன்னால் இருக்கும் குற்றை முன் தள்ளுதல் வேண்டும் அப்போது அது ஆறிற்கு முன்னால் வரும்

றாக அமைகிறது. பகுதி 2இல் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற பகுதிகள் அமையும். நேரடியாகவும், மறைமுகமாகவுமே இவ்

அலகு போடாவிட்டால் அக்கணக்கு சரியாக எடுக்கப்படமாட்டாது.

தமிழ்ப்பாடத்தை எடுத்துக் கொண்டால், மாணவர்கள் எழுத்துப் பிழையின்றி எழுதும் ஆற்றலைப் பெற்றிருத்தல் வேண்டும். சில மாணவர்கள் ஒரே பிழையை மீண்டும் மீண்டும் விடுவதை அவதானிக்கலாம். ஒத்த, எதிர்ச் சொற்கள், பெண்பால்,

அமைந்துவிடும். அதேபோல் பிள்ளையின் கற்பனை உருவில் சில கட்டுரைகளை அவர்களிடம் இருந்தே பெற்று தெரியாத சில குறிப்புக்களை கொடுத்து கட்டுரையை எழுதுவிப்போமானால் மாணவன் திறம்பட எழுதத் தொடங்கி விடுவான்.

எந்தக் கட்டுரையையும் தானே கற்பனை உருவில் எழுதத் தொடங்கி விடுவான்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை எமது ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் ஓர் பரீட்சையாக அமைந்துள்ளது. ஏனெனில் ஆண்டு 1 இல் பாடசாலை செல்லும் மாணவியோ, மாணவனோ ஆண்டு 5இல் தான் நாடளாவிய ஓர் பரீட்சையைச் சந்திக்கின்றனர். இப் பரீட்சையில் தம் பிள்ளைகள் சித்தி அடைந்து விடவேண்டும் என்று பெற்றோர்களும் ஆசைப்படுகின்றார்கள் என்பது வெளிப்படை உண்மையாகும்.

இப்புலமைப் பரிசில் பரீட்சையின் தரம் ஆண்டு 5மாணவர்களின் வயதின் அடிப்படையில் ஒப்பிடுகையில் கூடிவிட்டதாகப் பெற்றோர் கூறுவதையும் கேள்விப்பட்டிருக்கின்றோம். இப்பரீட்சையினால் ஆண்டு 5 இலேயே மாணவர் விவேகமாக சிந்திக்கவும் செயலாற்றவும் தொடங்கி விடுகிறார்கள்.

கணித பாடத்தை எடுத்துக் கொள்வோமானால் முதலில் மாணவர்கள் அப்பாடத்தை வெறுக்கும் அளவுக்கு மாணவர்கள் மேல் எல்லாவற்றையும் உடனே புகுத்திவிட வேண்டும் எனத் திணித்தல் கூடாது. பெற்றோரும் தம் பிள்ளை ஆண்டு 4 இல் ஆண்டு 5க்கு உரிய பாடங்களை எல்லாம் கற்றுக் கொண்டு விடவேண்டும் என்றும் அங்கலாய்க்கிறார்கள் ஆண்டு 4 பாடங்களை உண்மையாகவே இரண்டு தவணைகளில் முடித்து விட்டு மூன்றாம் தவணையில் இருந்து ஆண்டு 5 க்கு உரிய கணித பாடங்களை மாணவர்களுக்கு ஆசை ஊட்டும் வகையில் கொடுத்து முதலில் மாணவர்களுக்கு கணிதம் என்றால் இலகு என்ற தென்பை ஊட்டிவிடவேண்டும். சில கணக்குகளைநாம்குழந்தைச் செல்வங்களுக்கு ஊட்டும் போது இலகுவான முறைகளைக் கையாளவேண்டும். உதாரணமாக ஒரு கிலோ சீனியின் விலை36ரூபா50சதம்(36-50) எனில் 100 கிராம் சீனியின் விலை என்று கேட்கும் போது ஐந்துக்கு முன்னால் இருக்கும் குற்றை முன் தள்ளுதல் வேண்டும் அப்போது அது ஆறிற்கு முன்னால் வரும் ஈற்றில் உள்ள பூச்சியத்தை நீக்கி விட்டு இப்பொழுது வாசியுங்கள் என்றால் ரூபா 3-65சதம் என வாசித்து விடுவார்கள். இப்படி முதலில் இலகுவாகச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கியதும் ''கணிதம் என்றால் கடினம் அல்ல'' என்று மனதில் பட்டுவிடும் பின் ஏன் அப்படி நாம் அந்தக் குற்றை முன் தள்ளினோம் என்று விளக்கம் கொடுக்கலாம் ஆனால் நாம் மாணவர்களுக்கு 1000கிராம் 1கிலோ கிராம் ஆகவே 100 கிராம் கேட்டால் 100 ஆல் பெருக்கி 1000 ஆல் பிரிக்க வேண்டும் என்றதும் ஓர் பெரிய கணிதச் செய்கை என்று மாணவன் எண்ணிக் கணிதம் என்றாலே பெரிய செய்கைகளை எல்லாம் செய்தால் தான் வரும் என்று கணித பாடத்தை முற்றாகவே வெறுக்கத் தொடங்குகின்றான். ஆகவே நுட்பமான முறையாகவும், இலகுவான முறையாகவும் ஆண்டு 5 கணக்குகளைக் கற்பிக்க முடியும் சிறுபராய மாதலால் இலகுவான கற்பித்தல் முறைகளே வெற்றியளிக்கும். இப்படி பல உத்திகளை உபயோகித்து சிறுவர்களுக்கு கணித அறிவை ஊட்டுதல் சிறந்ததாக அமையும்.

மேலும் புலமைப் பரிசில் பரீட்சையை எடுத்துக் கொள்வோமானால் நான்கு பகுதிகளாகப் பிரித்து கணித பாடத்தில் வினாக்கள் கேட்கப்படும் பகுதி (I) இல் பல்தேர்வு வினா அதில் மாணவர்கள் கற்ற வினாக்கள் காணப்படும் மாணவர்கள் எடுத்த எடுப்பில் நான்கு விடையுள் ஒரு விடை கண்ணுக்குள் பட்டதும் அதை சரி என எடுத்து விடுவார்கள் வினாவை சரியாக விளங்கி வாசிக்காமலேயே விடை அளித்து விடுவார்கள். ஆகவே வாசிக்கும் திறனும், பொறுமையும் அவசியமான தொன்றாக அமைகிறது. பகுதி 2இல் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற பகுதிகள் அமையும். நேரடியாகவும், மறைமுகமாகவுமே இவ் வினாக்கள் அமையும் உ+ம் □ X 4 = 8X3 மறைமுகமாக கேட்டகப்பட்டிருக்கும். இவ் வினாவுக்கு சிந்திக்கும் ஆற்றல் அவசியம் எடுத்த எடுப்பில் விடையை எழுதிவிடுவார்கள் பின் சரிபார்ப்பது இல்லை. பகுதி 3 இல் சிறு வசன அமைப்பில் வினாக்கள் அமையும். வினாப்பகுதி 1, 2, 3 எந்த ஒரு மாணவனும் செய்துவிடலாம். ஆனால் மாணவர்கள் பிழைவிடுவது அவசரமும் கவனயீனமும் பின் பகுதி 4 இல் உள்ள வினாக்களின் வசன அமைப்பை ஒழுங்காக விளங்கிக் கொண்டால் மாணவர்கள் இலகுவில் செய்து விடுவார்கள். இக்கணக்குகளை

...தல் வேண்டும். சில மாணவர்கள் ஒரே பிழையை மீண்டும் மீண்டும் விடுவதை அவதானிக்கலாம். ஒத்த, எதிர்ச் சொற்கள், பெண்பால், ஆண்பால் சொற்கள், இளமைப் பெயர்கள் முதலியன தெரிந்துவைத்துக் கொள்ளல் வேண்டும். மீண்டும் மீண்டும் இவற்றை நினைவில் வைத்துக்கொள்வதற்கு மாணவர்கள் அடிக்கடி உலாவும் இடங்களில் சுவர்களில் எழுதி ஒட்டி விடலாம் படுக்கை அறைகளில் கூட அப்படிஒட்டி விட்டாலே மாணவர்கள் விளையாட்டாகக் கற்றுவிடுவார்கள். ஆனால் சில பெற்றோர் இன்று இவ்வளவும் மனனம் செய்தல் வேண்டும் என பிள்ளைமேல் திணித்து விடுகிறார்கள். இதனால் பிள்ளை பெரிய சுமைஒன்றை சுமக்கமுடியாது கஷ்டப்படுகிறது.

## திருமதி ப. இளங்கோ

உடுவில் மகளிர் கல்லூரி

தெளிவாக விளக்கம் எடுக்கும் ஆற்றலை மாணவர்களுக்கு பயிற்சியில் ஈடுபடுத்தி செயலாற்றச் செய்யமுடியும். வசனக் கணக்குகளை ஒரு முறை வாசிக்கும்போது விளங்கி அவதி இன்றி வாசித்தால் மாணவர்கள் இலகுவாக கணக்குகளை செய்துவிடுவார்கள்.

சில மாணவர்கள் பகுதி 4 வினாக்களுக்கு திறம்பட விடைகள் எழுதிவிடுவார்கள். ஆனால் பகுதி 1, 2, 3 இல் கவனயீனப் பிழைகள் விட்டுவிடுவார்கள். பகுதி 1, 2, 3 வினாக்களுக்கு பிழையின்றி விடை அளித்தாலே கணித பாடத்தில் 70 புள்ளிகளுக்கு குறையாமல்எடுத்துவிடலாம். கணிதபாடத்தை செய்து முடித்த மாணவர்கள் பின் நேரம் இருந்தால் திருப்பிப் பார்ப்பது இல்லை. விடைகளுக்கு இடவேண்டிய அலகுகளை போடாமல் விட்டுவிடுவார்கள் விடை எல்லாம் சரி. நான் சித்தி பெற்றுவிடலாம், என்று எண்ணுவார்கள்.

சிறு கவிதைகள் புலமைப் பரிசில் பரீட்சையில் கொடுக்கப்படுவது வழக்கம் இலகுவில் மாணவர்கள் விளங்கிக் கொள்ள கவிதைகளை எப்படிப் பிரித்து வாசிக்கலாம் என்பதை புகுத்திவிட்டால் இலகுவாக வினாக்களுக்கு விடை அளித்து விடுவார்கள்.

கட்டுரையை எடுத்துக் கொண்டால், பெற்றோரே கட்டுரைப் புத்தகங்கள் எல்லாவற்றையும் கடையில் வாங்கி வந்து பிள்ளையிடம் கொடுத்து பாடமாக்கு என்று திணித்து விடுவார்கள். அப்படி செய்வதால் மாணவர்கள் பெரும் சுமையாக கருதி தமிழ் பாடத்தையே அலட்சியப் படுத்தத் தொடங்குகின்றார்கள். உதாரணம்: காலைக் காட்சியை எடுத்திக் கொண்டால், பிள்ளையிடம் காலை நடப்பன என்ன? என்ற வினாக்களை எழுப்பி பின் அதைத் தொகுத்து பிள்ளை விளங்கிய வடிவில் எழுதுவித்தால் பிள்ளைக்கும் காலைக் காட்சி என்றால் இலகுவாக திறம்பட எழுதத் தொடங்கி விடுவான்.

எந்தக் கட்டுரையையும் தானே கற்பனை உருவில் எழுதத் தொடங்கி விடுவான். கட்டுரைப் புத்தகங்களை வாசிக்க விடாமல் மனனம் செய்வதுபெரியசுமையேஆகும் பெற்றோர்கள் சிலர் பெரும் சுமைகளை மாணவர்கள் மேல் திணிப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் திறம்படக் கற்பித்தாலும் கூட பெற்றோர்கள் திருப்தி அடைவதில்லை. பிள்ளை ரியூசன் சென்று கற்கவேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள். ஆனால் பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலையில் படித்த பாடங்களைத் திரும்ப வீட்டில் கற்கிறார்களா என்று பார்ப்பதில்லை. வீட்டில் பாடசாலையில் பிழைவிடும் கணக்குகளையோ, தமிழ் பாடத்தையோ திரும்ப செய்விப்பது கூட இல்லை, சில மாணவர்கள் பாடசாலையில் பரீட்சை எழுதும்போது இன்று குறைய புள்ளிகள் எடுத்தால் வீட்டில் தப்பமுடியாது என்ற ஏக்கத்துடன் பரீட்சை எழுதுகிறார்கள். அந்த ஏக்கத்தில் வினாக்களை சரியாக வாசிப்பது கூட இல்லை. இதற்கெல்லாம் காரணம் பெற்றோரில் உள்ள பயமே.

ஆகவே பெற்றோர்கள் பிள்ளைகளைத் தட்டி எழுப்பி பிழைவிட்டாலும் பிள்ளைகளை சிந்திக்க வைப்பதே சிறந்ததாகும்.

பிழைகளை விடும் பிள்ளை தான் ''நான் ஏன் இப் பிழையை விட்டேன்'' என சிந்திக்கத் தொடங்கும். சிந்திக்கும் பிள்ளை செயலாற்றும் என்பது நாம் கண்ட உண்மையாகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் புலமைப்பரீட்சையில் சித்தியடையாவிட்டால் கவலையடைகிறார்கள் ஆனால் புலமைப்பரீட்சைக்குத் தயாராகும் மாணவன் விவேகம் உள்ளவனாக மாற்றப்பட்டுவிட்டான் என்பதை மறர்துவிடல் ஆசாது.

★ வினாவின் ஒவ்வொரு பிரிவுகளுக்குமிடையில் இடைவெளிவிடுக. பின்பு அது தொடர்பாக ஏதாவது எழுத வேண்டியிருப்பின் எழுதலாம்.

★ ஒவ்வொரு வினாவுக்குரிய விடையையும் புதிய தாளில் தொடங்குக.

★ விடை எழுத முடியாத வினாவுக்குரிய இலக்கத்தை எழுதி பின்பு எழுதுவதற்கு இடைவெளிவிட்டு அடுத்த வினாவுக்கு விடை எழுதுக. உ+ம்: வினா 1 இல் (அ) (ஆ) (இ) (ஈ) என்ற உப வினாக்கள் இருப்பின் ஏதாவது ஒன்றிற்கு விடை எழுத முடியாவிடின் வினா இலக்க ஒழுங்கமைப்பை மாற்றாதீர்கள். (ஆ) பிரிவு விடையை 8 ஆம் பக்கத்தில் தயவு செய்து பார்க்கவும் என எழுதுவதைத் தவிர்க்கவும்.

10. வினாவிற்கேற்ற விடை:

இது பல்வேறு வினாக்களின் தன்மைக்கேற்ப தனித் தனியாக அடுத்து நோக்கப்படுகின்றது:

**A** வேறுபடுத்துக:

சிக்கலின்றி எளிமையான முறையில் குறிப்பிட்ட இரு எண்ணக்கருக்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபட்ட அம்சங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டுதல்வேண்டும். இவற்றில் ஒன்று சரி மற்றையது பிழையாக அமையுமிடத்து அதற்குப்புள்ளி வழங்கப்பட மாட்டாது. எனவே இத்தகைய வினாக்களைத்தெரிவு செய்யும்போது இரு எண்ணக்கருக்களும் தெரிந்தவையா என கவனிக்க வேண்டும். வேறுபடுத்தும் அம்சங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி பந்தியாக எழுதல் வேண்டும். திரட்டி எழுதுதல் கூடாது. அதே போல ஒரு எண்ணக்கருவை முழுமையாக விளக்கி முடித்த பின் அடுத்ததையும் முழுமையாக விளக்கி முடிப்பது வேறுபடுத்துவதல்ல. அது இரு சிறுகுறிப்புக்களாகவே அமையும்.

**B** ஒப்பிடுக:

எனக்கேட்கப்பட்டால் இரண்டிற்குமிடையில் காணப்

...இலக்கங்களுக்குரிய கணிப்புக்களை அவ் இலக்கத்தின் கீழ் காட்டுக.

★ 'சென்மதிநிலுவை நடைமுறைக் கணக்கின் மாதிரி ஒன்றை தயாரிக்க' எனக் கேட்கப்பட்டால் எண்கள் மூலம் கணிப்பிட்டுக் காட்டுக. கணிப்புக்கு புள்ளி வழங்கப் படும்.

**G** தொகைகள்

தொகைகளை 'ரூபா' அல்லது 'மில்லியன் ரூபா' அல்லது 'அலகுகள்' என சரியான பதத்தால் காட்ட வேண்டும்.

**H** உதாரணங்கள்:

கேட்கப்படும் போது கட்டாயம் உதாரணங்கள் வழங்கப்படவேண்டும். கேட்காத விடத்தும் விடையை தெளிவாக விளக்குவதற்கு உதாரணங்களைப் பயன்படுத்துக. ஏனெனில் அவற்றுக்கு தனியாகப் புள்ளி வழங்கப்படும்.

**I** எடுகோள்கள்

நேரடியாகவும் கேட்கப்படும். அதே நேரம் சில விடைகளை எழுதும் போது எடுகோள்களைக் குறிப்பிட்டு விடையளிக்க வேண்டும். அவற்றை கவனத்தில் கொண்டே புள்ளி வழங்கப்படும்.

**J** தேசிய வருமான வட்டப்பாய்ச்சல்

பற்றிய விளக்கப்படத்தில் மெய்ச்சுற்றோட்டம், பணச் சுற்றோட்டம்காட்டப்படுமிடத்து அவை ஒவ்வொன்றும் உட்புறம் அல்லது வெளிப்புறம் அமைந்திருத்தல் வேண்டும். மெய்ப்பாய்ச்சலின் ஒரு பகுதி உட்புறமும் மறு பகுதி வெளிப்புறமும் காட்டப்படின் புள்ளி வழங்கப்பட மாட்டாது.

● எளிய / சேமிப்புத்தன்மையற்ற எனக் குறிப்பிடாது மூடப்பட்ட அரச தலையீடற்ற பொருளாதாரத்தில் வருமான வட்டப்பாய்ச்சல் பற்றி விளக்கும் போது சேமிப்பு (S) வெளிப்பாய்ச்சலாகவும், முதலீடு (I) உட்பாய்ச்சலாகவும் காட்டப்படல் வேண்டும்

(5ஆம் பக்கம் பார்க்க)

# தாவரவியல் A/L

## சூழலியல் -ஒரு பரீட்சை நோக்கு

தொடர்ச்சி...

04- 07- 94 அன்று மாணவர் அரங்குப் பகுதியில் சூழலியல் தொடர்பான பரீட்சைக்கான வழிகாட்டல் குறிப்புக்களின் ஒரு பகுதியை பிரசுரித்திருந்தோம். அதில் மண் இரசாயனம், காலநிலையியல் இலங்கைக்காடுகள் என்பவற்றை உள்ளடக்கியதான கடந்த கால பரீட்சை வினாக்களை மையமாக வைத்து சில குறிப்புக்கள் தரப்பட்டிருந்தன. அதே போன்று பிறிதொரு பாடப்பிரிவான சூழல் மாசுபடுதல் **(Pollutions)** பற்றிய பரீட்சை விடயங்களை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

சூழல் மாசுபடுதல் பற்றிய அறிவு கீழ் வகுப்புக்களிலிருந்தே வெவ்வேறு பாடங்களினூடாக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆயினும் தாவரவியல் கற்கும் மாணவர்களுக்கு மாசுபடுதல் தொடர்பான வினாக்கள் பொதுவாக உலகளாவிய ரீதியில் ஏற்படும். மாசடைதல், உள்நாட்டுக்குரிய மாசுபடுதல் தாக்கங்கள் என்பவற்றை கருவாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியில் ஏற்படுகின்ற,

★ பச்சை வீட்டு விளைவு / பூமியின் சுற்றாடல் வெப்பமாக்கப்படுதல்
★ ஓசோன் படையின் நலிவு
★ அமில மழை
★ மழைக்காடுகள்தீக்கிரையாக்கப்படல் போன்றன

பிரபல்யமாக உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்தேர்வு, அமைப்புக்கட்டுரை, கட்டுரை வினாக்கள் என்பன தயாரிக்கப்படுகின்றன.

உதாரணமாக 1990 **AUG** இல் பச்சைவீட்டு விளைவுக்குரிய காரணங்களை அடிப்படையாக வைத்து பல்தேர்வு வினா கேட்கப்பட்டிருந்தது. 1991 **AUG**இல் காபன் வட்டத்துடன் தொடர்புபடுத்தி அமைப்புக்கட்டுரை வினாவில் பச்சைவீட்டு விளைவு புகுத்தப்பட்டிருந்தது. அதேபோல 1992 **AUG**இல் கேட்கப்பட்ட கட்டுரை வினாவிற்கு பச்சை வீட்டுவிளைவு, ஓசோன்படை குன்றுதல் போன்றவற்றை பிரதான அம்சமாகக் கொண்டு விடையளிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. வினாக்கள் உருவாக்கப்படும் முறைமையையும் விடையளிக்கும் திட்டத்தின் உருவாக்கத்தையும் வைத்து அவதானிக்கும் போது ஆரம்பத்திலிருந்து படிப்படியாக வினாக்களின் சிக்கல் தன்மை அதிகரிப்பதையும் மாசுபடுதல் சம்பந்தமாக ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் மாணவர்கள் தெரிந்திருக்க வேண்டிய அவசியத்தையும் அறிய முடிகின்றது. இவ்வாறான நோக்கில் தற்பொழுது சூழல் மாசுபடுதல் தொடர்பாக குளோரோ புளோரோ காபன் (**CFCS**) எனப்படுகின்ற சேதனச் சேர்வை பற்றி விஞ்ஞானம் கற்கும் குயர்தர மாணவர்கள் அறிந்திருத்தல் அவசியமாகும்


### CHLORO FLUORO CARBONS (CFCS)
(குளோரோ புறோரோ காபன்)

**CFC** என அழைக்கப்படுகின்ற இச் சேர்வை காபனையும் புளோரினையும் குளோரினையும் கொண்டது பல்வேறு கைத்தொழில் முயற்சிகளின்பொழுது இச் சேர்வை பயன் படுத்தப்படுவதால் வருடாந்தம் 1.1 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு மேல் உற்பத்தி செய்யப்படுகின்றது.

பின்வரும் கைத் தொழிலாக்கத்தில் CFC பொதுவாக. பயன்படுத்தப்படுகின்றது.

(A) இலத்திரனியல் உபகரணங்களை சுத்தம்

கள் I.R கதிர்கள் எவ்வாறு தடுக்கப்படுகின்றது என்பதனை கீழுள்ள படம் விளக்குகின்றது.




ஓசோன் படை நலிவடைய **U.V** கதிர்கள் அதிகளவில் புவிமேற்பரப்பை வந்தடையும் இதனால்

(1) தோற்புற்று நோய் ஏற்படல்
(2) ஒளித்தொகுப்பு அங்கிகள் பாதிக்கப்பட்டதும் முதலான உற்பத்திகுறைவடையும்- நுகரிகள் பாதிக்கப்படும்.
(3) கூடிய சக்திக் கதிர்ப்பு வந்தடைவதினால் புவி வெப்பநிலை கூடும்.
(4) கட்டடங்களின் பூச்சுக்கள் அமைப்புகள் போன்றன **U.V** கதிர் வீச்சால் சிதைக்கப்படும்.

(2) உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு

சூரியனிலிருந்து வரும் குற்றலை நீளக் கதிர்ப்புக்களை வளிமண்டலம் புகவிடும் இவை புவிமேற்பரப்பில் வெப்பமாக அல்லது வெப்பக் கதிர் வீசலாக மாற்றப்பட்டதும் நீண்ட அலை நீள செந்நிறக் கீழ் (**IR**) கதிர்பாக வெளிப்படும் இவற்றை வளிமண்டலத்திலுள்ள $CO_2$ CFC, $CH_4$ $N_2O$ நீராவி போன்றன. வெளியேறாது தக்கவைத்துக் கொள்வதால் புவிச்சூழல் வெப்பமேற்றப்படும். இவ வாயுக்கள் பச்சை வீட்டின் (**Green House**) கண்ணாடி போல நீண்ட அலை நீளக் கதிர் வீசலை உறிஞ்சிக்கொள்வதனால் இவை பச்சை வீட்டு வாயுக்கள் எனப்படும் (**Green House gases**) உலகின் வெப்பநிலை அதிகரிப்பால் அல்லது பச்சைவீட்டு விளைவினால்

A) கடல் நீரின் வெப்பவிரிவினால் பல தீவுகள், கரையோரப் பிரதேசங்கள் நீரில் மூழ்கும்.
B) துருவங்களில், மலைஉச்சிகளில் பனிக்கட்டிகள் உருகுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படும்.
C) காலநிலை மாற்றமடைவதால் பிரதான விளை நிலங்கள் பாதிப்புக்குட்படும் இதனால் பொருளாதார மாற்றம் ஏற்படும்.
D) அதிகளவு நீர் ஆவியாகிப் புவியை மூடுவதால் வெப்பநிலை மேலும் உயர்வடையும்

### CFC பயன்பாட்டைக் கட்டுப்படுத்தல்

ஒரு **Cl** அணுவானது 100,000 வரையான $O_3$ மூலக்கூறுகளை அழிக்கும் என்பதாலும், ஒரு **CFC** மூலக்கூறானது ஒரு$CO_2$ மூலக்கூறிலும் பார்க்க 10,000 மடங்கு வெப்பத்தைத் தேக்கும் திறனைக் கொண்டிருப்பதாலும் அதிகரித்த CFC பாவனையானது புவியை மிக விரைவாகப் பாதிக்கும். எனவே CFC பாவனையை நிறுத்தும் அல்லது குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவையாவன:

(1) CFC யிற்குப் பதிலாக ஐதரோக் காபன்களைப் பயன்படுத்தல்.

(2) CFC யுடன் ஐதரசனைச் சேர்த்து **HCFC (Hydrogenated CFC)** தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தல். இவை உறுதிகுறைந்தன ஆதலின் படைமண்டலத்தை அடைய முன்னரே சிதைந்து விடுகின்றன. இதனால் $O_3$படையை இவை தாக்கா.

(3) குளோரீனற்ற சேர்வைகளான புளோரோக் காபன்களை (**HFC**) பயன்படுத்தல்.

மேற்கூறிய மாற்று வழிகள் காணப்படினும் இவை தொழின்முறை ரீதியில்வினைத்திறன் குறைந்தனவாயும், பரீட்சார்த்த நிலையிலுமே காணப்படுகின்றன. எனவே **CFC** பாவனையை முற்றாக நிறுத்துவதாயின் அதற்கான மாற்றுத் தொழில்நுட்பங்கள் உபயோகிக்கப்படும் வரை நாம் காத்திருக்க வேண்டும்.

ஆதாரம்:- **Saving The Ozone Layer**

மாணவர்களுக்கு .. எதிர்வரும் 04-ம்,05-ம்திகதிகளில்நிகழவிருக்கும்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தாவரவியல் மாணவர்கள் பின்வருவனவற்றை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(1) பல்தேர்வு வினாக்களை விரைவாகவும், மிகவும் அவதானத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வாசித்த பின் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுங்கள்.
(2) உங்களது விடைகளின் இலக்கத்தை நேரடியாக விடைத்தாளில் புள்ளடியிட்டுக்கொள்க

(3) அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு சுருக்கமான ஆனால் தெளிவான விடைகளை தரப்பட்ட இடைவெளிக்குள் மாத்திரம் எழுதிக் கொள்க.

(4) கட்டுரை வினாக்களுக்கு விடை எழுதும் போது எழுத்துக்களை அழகாகவும் தெளிவாகவும் எழுதுவதுடன் நேரக்கட்டுப்பாட்டிற்குள் எழுதி முடித்துக் கொள்ளுங்கள். தேவையேற்படாத, அல்லது வினாக்களுக்கு பொருத்தமற்ற சந்தர்ப்பங்களில் படங்களை கீறுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

(5) படங்களை கீறும் போது தெளிவாகவும் சுத்தமாகவும் கீறிக் கொள்வதுடன் இயன்றவரை கீறிய பகுதிகளை குறித்துக் கொள்ளுங்கள்.

சுப்பிரமணியம் செல்வநேசன்
ஆசிரியர்
சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## க. பொ. த. உயர்தரம்
## தமிழ் - பரீட்சை வழிகாட்டல்

பின்வரும் கைத் தொழிலாக்கத்தில் CFC பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது.

(A) இலத்திரனியல் உபகரணங்களை சுத்தம் செய்வதற்கும். அழகு சாதனப்பொருட்களின் உற்பத்தியில் கரைப்பானாகவும் பயன்படுத்தப்படுதல்

(B) இலகுவில் ஆவியாகும் தன்மையுள்ள நஞ்சுத் தன்மையற்ற சேர்வையாதலால் குளிரூட்டிகளில் குளிரூட்டும் திரவமாகப் பயன்படுத்தப்படுதல்.

(C) நுரை போன்ற பஞ்சுகள் (Foams) தயாரித்து வெப்பக் காவலிகளாக பயன்படுத்தல்

(D) தெளிகருவிகளில் திரவம் விசிறப்படுவதற்கான விசையைக் கொடுப்பதற்காக (Aerosols)


மேற் குறிப்பிட்ட தொழில் முயற்சிகளின் மூலம் விடுவிக்கப்படுகின்ற CFC பல்வேறு வகையில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இதனால் மனிதன் உட்பட்ட அநேக உயிரினங்கள் நோய்க்குட்படுகின்றன அல்லது இறந்து மடிகின்றன.

### பாதிப்புகள்

**1) ஓசோன் படை குன்றுதல்:**

வளிமண்டலத்தின் படை மண்டலத்தில் (15km-50km) ஓசோனின் செறிவு உயர்வாக உள்ள பிரதேசத்தை ஓசோன் படை என கருதப்படுகின்றது.

வளிச் சூழலுக்கு விடுவிக்கப்பட்ட உறுதியான CFC' சிதைவடையாமல் காலக்கிரமத்தில் ஓசோனின் செறிவு கூடிய படைமண்டலத்தை அடையும் இங்கு அதிதஊதாக்கதிர் வீச்சின் (U.V radiation) மூலம் CFC யில் காணப்படும் குளோரின் அணுவொன்று பிரித்து வேறாக்கப்படும் இது ஓசோன் படையுடன் தாக்கமுற்று ஒட்சிசனையும் குளோரின் ஒரொக்சைடையும் உருவாக்கும். உறுதியற்ற குளோரினோரொக்சைடு மீண்டும் பிரிந்து ஒட்சிசனையும் குளோரின் அணுவையும் தோற்றுவிக்கும்.



விடுவிக்கப்பட்ட அணு நிலை குளோரினானது மீண்டும், மீண்டும் ஓசோனுடன் ($O_3$) தாக்கமுற்று ஒட்சிசனாக அகற்றப்பட ($O_2$ வாக) ஓசோனின் செறிவு படிப்படியாக குறையும் இதுவே ஓசோன் படை நலிவு எனப்படுகின்றது.

ஓசோன் படை காணப்படுவதனால் புவிமேற் பரப்பை U.V கதிர்கள் வந்தடைவது தடுக்கப்படுகின்றது கட்புலனாகும் கதிர்கள் தவிர்ந்த U.V கதிர்

# தமிழ் - பரீட்சை வழிகாட்டல்

தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மத்தியிலும், இன்று தமிழ் மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்பில் பொதுப்பரீட்சையினையும், மறைமுகமாக ஒரு திறந்த போட்டிப்பரீட்சையினையும், 'தமிழ்' ஒரு பாடமாகத் தோற்றும் மாணவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு போட்டிப் பரீட்சையினையும் சிங்கள மாணவர்களை ஒப்பிடுமிடத்து எதிர்கொள்ளுகின்றனர்.

'தமிழ்'ப்பாடத்தினை எதிர்கொள்ளும் மாணவர்களுக்குப் பதிலீடாக சிங்களப்பாடம் சிங்கள மாணவர்களுக்கு அமைகின்றது. சிங்களத்தினைத் தாய்மொழியாகக் கொண்டு தோற்றுகின்ற கலைப்பிரிவு மாணவர்கள் 'சிங்களம்' ஒரு பாடமாகத் தோற்றி அதில் ஒப்பீட்டு அடிப்படையில் 'தமிழ்' பாடத்தினை விட உயர்ந்த பெறுபேறுகளை எடுக்கின்றமையினை, கடந்த பத்து ஆண்டுகளில் வந்த பெறுபேற்றினை மதிப்பீடு செய்யும் போது உணரமுடிகிறது. இதனைப் போக்க தமிழ் மாணவர்கள் தமிழ்ப்பாடத்தினைவருகின்ற க. பொ. த உயர்தர வகுப்பில் எதிர்கொள்வதற்கான சில ஆலோசனைகள் இவ்விடத்தில் பொருத்தமானதாக இருக்கும்.

தமிழ் பாடம் இரண்டு வினாப்பத்திரங்களை உடையதாகும். பகுதி ஒன்று வினாத்தாள் திருக்குறள், ஆசிய ஜோதி, காரைக்கால் அம்மையார் புராணம், முகியீத்தீன் புராணம், இரட்சணிய யாத்திரிகம் ஆகிய பாடப்பகுதிகளைக் கட்டாய வினாக்களாக கொண்டது. இதில் திருக்குறள் பொருள் எழுதுதலும் ஆசியஜோதி சிறப்பு அல்லது நயம் எழுதுதலும் மிகவும் முக்கியமானது. பகுதி ஒன்று வினாத்தாளில் ''சந்தர்ப்பம் கூறிப் பொருள் விளக்கம் தருதல்'' என்ற பகுதியில் ஆ, இ, ஈ ஆகிய மூன்று பகுதியுள்ள இரண்டு பகுதிகளுக்கே விடையளித்தல் வேண்டும். சந்தர்ப்பம் எழுதும் போது இரண்டு சோடிப்பாடல்களுக்கும் ஒன்றாகஎழுதுவதோடு, அதற்காக ஐந்து அல்லது ஆறு வரிகளை விடைத்தாளில் பயன்படுத்துதல் பொருத்தமான நேரமதிப்பீடாக இருக்க முடியும். ஆசியஜோதிக்கு நயம் எழுதும் போது, கவிமணியின் உணர்வு, அது பிரதிபலிக்கும் தன்மை, எடுத்துக்காட்டுக்கள், மொழியின் இலகுத்தன்மை, பிற இலக்கியங்களில் பரீட்சார்த்திக்கிருக்கும் ஈடுபாடு முதலான அம்சங்களை உள்ளடக்கியதாக 50 வரிகளுக்கும் 60 வரிகளுக்கும் இடைப்பட்டதாக விடையளித்தல் வேண்டும்.

பகுதி ஒன்று இரண்டாவது பிரிவில் வருகின்ற திருக்குறள் காரைக்கால் அம்மையார் புராணம், இரட்சணிய யாத்திரிகம், முகியீத்தீன் புராணம், ஆசியஜோதி, இலக்கிய வழி, விபுலானந்தர் கட்டுரைகள் என்ற பகுதியுள் இலக்கிய வழி, விபுலானந்தர் கட்டுரை ஆகிய இரண்டும் நீங்கலாக ஏனையவற்றுக்கு விடையளிக்கும் போது, அந்நூலில் வருகின்ற பாடல் வரிகளை உரியமுறையில் நூலில் இருப்பது போன்று '' '' மேற்கோள் குறியுள் எழுதுதல் அவசியம். இதனை பரீட்சார்த்தி தனது சொந்த நடையில் எழுதி விட்டு நூலாசிரியர் இவ்வாறு வரையறுத்துள்ளார் என்று கூறுவது தவிர்க்கப்பட வேண்டும். எழுதுகின்ற விடையின் பெரும் பகுதி பரீட்சார்த்தியின் நடையிலும்சிறுபகுதி எடுத்துக்காட்டுக்களாகவும் அமைதலே பொருத்தமாகும். உதாரணமாக திருவள்ளுவர் அடக்கமுடமை என்ற அதிகாரத்தில் கூறிய கருத்தையும் பரிமேலழகர் கூறிய உரையினையும் முழுமையாக எழுதி இரண்டு பக்கங்களை நிறைவு செய்து ஒருபக்கத்தில் சொந்தமான பரீட்சார்த்தியின் நடை இருப்பது பொருத்தமற்ற அணுகுமுறையாகும்.

தமிழ்ப்பாட மாணவர்களைப் பொறுத்தவரையில் பகுதி இரண்டு வினாத்தாளே மாணவர்களுக்கு பெரும் குழப்பத்தை உண்டுபண்ணுவதாகும். இரண்டு ஆண்டுகளாக மாணவன் பெற்ற நூலறிவும் அதனோடுஒட்டிய பலதுறை சார் அனுபவங்களும் உள்ளடக்கிய மாணவனின் கிரகித்தல், ஆளுமை, முதலானவற்றை இவ்வினாத்தாளின் கட்டுரை உரைப்பகுதி ஆகிய இரண்டு வினாக்களும் அமைகின்றன.

கட்டுரையும் உரைநடையும் தெரிவுவினாக்கள் அல்ல என்பதைக் கருத்தில் கொண்டு விடைஎழுதுதல்அவசியம் கட்டுரைக்கு மொத்தமாக 20 புள்ளிகள் வழங்கப்படுகிறது இதிலே 10 புள்ளி கட்டுரைப் பொருளுக்கும் 2 புள்ளி கட்டுரையின் அளவுக்கும் ஏனைய 8 புள்ளியும் சொல்வன்மை, வாக்கியத்தெளிவு, உறுப்பெழுத்து, நிறுத்தல் குறியீடுகள், பந்தியமைப்பு முதலானவற்றுக்கு இடப்படுகிறது. கட்டுரை எழுதும் போது எழுத்துப்பிழைகளைத் தவிர்த்தல் மிகவும் அவசியம் சொற்களையோ, வாக்கியங்களையோ நீக்கி விடுவதை தவிர்க்குமாப் போல் வசனநடையைகையாளுதல்வேண்டும் உதாரணமாக சாமாதனம் இப்போது அவசியம் என்ற வாக்கியத்தினை தவறுதலாக ''சாமாதானம் இப்போது அவசியமில்லை'' என எழுத நேர்ந்தால் அதனை வெட்டிவிடல் என்பதைத் தவிர்த்து சமாதானம் இப்போது அவசியம் இல்லை என்பது அப்பட்டமான பொய் '' என்றோ ''அல்ல து சாமாதானம் இப்போது அவசியம் இல்லை என்ற கருத்துக்கே இடமில்லை '' என்றோ வாக்கியத்தை நிறுத்த முயற்சிக்க வேண்டும்.

கட்டுரை எழுதுவதற்கு முன்னதாக எழுதப்போகின்ற தலைப்புக்குள் அடங்கும் பிரதான விடயங்களை குறித்து ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். அதன்பின்னரே எழுதுதல் அவசியம்.

நோக்கினால் 15 சிறியவினாக்களுள் 10 வினாக்களுக்குச் சுருக்கமாக விடைதருக என்றே அமைகிறது. உதாரணமாக அகச் சுட்டுக்கு உதாரணம் தருக? என்ற வினாவிற்கு - அவன், இவன் உவன் என்ற மூன்றும் எழுதினால் போதுமானது. இதிலே அவன், அவள் அவர், அது அவை, இவன், இவள், இவர் இது, இவை, உவன், உவள் உவர், உது, உவை என்று எழுத வேண்டிய அவசியம் இல்லை. இதேபோல் எண் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்ட வேற்றுமை உருபுகளைக் குறிப்பிட்டு


**சிற்றம்பலம் கணேசலிங்கம்**

**B.A. (Hons) (Cey)**

**ஆசிரியர் யா. மகாஜனக் கல்லூரி**

**தெல்லிப்பழை**


கட்டுரைகளில் மேற்கோள் காட்டும் போது அவ்வறிஞர் கூறியதுபோன்று குறிப்பிடுவதோடு மேற்கோள் அடையாளம் இடுதல் அவசியம். இதே போல கட்டுரையில் நீங்கள் ஒருவினாவை எழுப்புவதாயின் வினா அடையாளம் இடுவதோடு, அதற்கான விடையினையும் உங்கள் கட்டுரையின் இறுதிப் பகுதியில் அமைத்தல் பொருத்தமாகும். முக்கியமாக முன்னுக்குப் - பின் முரண்பாடு தோன்றாமல் நிதானமாக எழுதுதல் வேண்டும். கலைச் சொற்களை கட்டுரைத்தெளிவிற்கு அடைப்புக் குறிக்குள் கையாளுதல் வேண்டும். உதாரணமாக (சுப்பர் சோனிக்) என்பதை அடைப்புக்குள்ளும் மிகை ஒலிதாரைவேக விமானம் என்பதை நேரடியாகவும் பயன்படுத்தல் வேண்டும்.

இரண்டாம் பகுதியில் வருகின்ற இலக்கண வினாக்களை ஒவ்வோர் உதாரணம் தருக. என்றவினாவிற்கு ஆறாம் வேற்றுமை - ஒருமைக்கு அது, ஆது,

பன்மைக்கு அ உருபுகளாகும்.

உதாரணம்.

எனது வீடு—
எனாது வீடு
6 ம் வேற்றுமை ஒருமை
என வீடுகள்
6-ம் வேற்றுமை பன்மை

என்று விடை கூற வேண்டும். இவ்வினாவுக்குள் இரண்டு, விடைகள் எதிர் பார்க்கப்படுகின்றது ஒன்று ஒருமை பன்மைபாகுபாடு- உடைய வேற்றுமை, இரண்டாவது அவ்வேற்றுமை உருபுகளு, கான உதாரணம் இவ்வாறான வினாக்களுக்கு விளக்கம் கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக அதுவும் ஆதுவும் ஒத்த

(5ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு..

அரசியல் வாதி தான் சொல்வதையே நம்பாததால் மற்றவர்கள் நம்பும் போது ஆச்சரியமடைகிறான்.

- சார்ல் தெ கோல்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 01-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# தேர்தல் வாக்குறுதிகள்

வழமை போலவே அரசியற் கட்சிகள் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றன. இதில் வேலைவாய்ப்பு மானியங்கள் என்பனவற்றை அரசியற்கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு அறிவித்தும் வருகின்றன. இத்தேர்தல் வாக்குறுதிகள் ஓரளவேனும் யதார்த்தத்திற்கு ஒப்பானவையா? அவை நிறைவேற்றப்படக் கூடியனவா? என்பதைப் பற்றி அவை சிந்தித்துப் பார்க்கவில்லை. சலுகைகள் அறிவிப்பதில் ஓர் ஒட்டப்பந்தயமே நடக்கின்றது என்று கூறினாலும் அவை மிகையானதல்ல.

ஆனால் இச்சலுகை அறிவிப்புக்களுடன் பல அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்புக்களும் தாராளமாக வழங்கப்படுவதுதான் ஆச்சரியமானதாகவும், அதிர்ச்சி அளிப்பனவையாகவும் உள்ளன. இவ் அறிவிப்புக்கள் சில கடந்த கால வரலாற்றை மறுப்பவையாகவும், சில யதார்த்தத்தைப் புறக்கணிப்பவையாகவும், சில எதிர்காலம் பற்றியதாயினும் இலகுவில் நிறைவேற்றிவிடக் கூடியவையாகவும் இல்லை என்பதேஇங்கு அவதானிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

இந்தவகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் 'இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வல்லமை ஐ. தே. கவிடமே உள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளமையானது, வரலாற்றை அவர் முற்றாகவே நிராகரிக்க முற்படும் ஒரு செயலே ஆகும்.

ஏனெனில் பதினேழு வருடங்கள் (17) ஆட்சியில் இருக்கும் ஐ.தே.க. இனப்பிரச்சினை விவகாரத்தில். ஓர் அங்குலந்தானும் முன்னேறவில்லை. மாறாக தமிழ் மக்கள் சாத்வீக ரீதியாக நடத்திய போராட்டத்தை இன்று உலகில் நடைபெறும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டங்களில் முதன்மையான போராட்டங்களில் ஒன்றாக மாற்றியுள்ளது. அத்தோடு பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் உயிர் இழப்பிற்குக் ஐ. தே. க. காரணமாகவும் இருந்துள்ளது.

இந்நிலையில் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வல்லமை தமக்கே உள்ளது என்ற பிரதமரின் பேச்சானது வெறும் தேர்தல் வாய்வீச்சு என்பதைத் தவிர வேறு எவ்வகையிலும் அர்த்தம் கொள்ள முடியாத ஒரு பேச்சே ஆகும்.

# மக்களிடம் குரோதம் வளர்க்கும் பேச்சுக்களை கைவிடுங்கள்

## - தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்தின் போது மக்களிடையே குரோதத்தை வளர்க்கும் வகையிலான பேச்சுக்களை கைவிடுமாறு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளை அவர் சந்தித்த போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விசேட ஆள் அடையாள அட்டையை ஆட்பதிவு திணைக்களம் வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளவும், தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு தடையின்றி சென்று வரவும் இந்த அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

முதன்மை வேட்பாளர்களுக்கு மட்டுமே இவ் அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

# அமைச்சர் அதிகாரிக்கு நீதிமன்றம் பிடிவிறாந்து

(கொழும்பு)

பொ- ஐ- மு- ஆதரவாளர் கொலை தொடர்பாக அமைச்சர் எம்- எஸ்- அதிகாரிக்கு நீதிமன்றத்தினால்பிடிஆணை பிறப்பிக்கப்பட்ட போதும் இதுவரை அவரைக் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்துவதற்கு பொலிசார் தவறி விட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்-

அவர் தொடர்ந்தும் சுதந்திரமான முறையில் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இக் கொலை தொடர்பாக இதுவரை எவரையும் கைது செய்ய முடியவில்லை எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன-

# மாநகராட்சி கட்டடத்தை மீளப்பெற போராடுவாராம்

இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கும் மட்டக்களப்பு மாநகராட்சிக் கட்டட வளாகத்தை மீளப் பெறுவதே தமது முதல் குறிக்கோள் என்று மட்டக்களப்பு மாநகர மேயர் செழியன் ஜே. பேரின்பநாயகம் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தற்போது தான் இதற்கான போராட்டத்தை மேற்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# அரசாங்க சொத்துக்கள் அமைச்சர் நலன்களுக்கல்ல

## பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

அரசாங்க வாகனங்கள் மற்றும் அரசாங்க சொத்துக்கள் தேர்தல் காலங்களில் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழுவொன்றைபொது ஜனஐக்கிய முன்னணி அமைத்துள்ளதாக பேராசிரியர் ஜே. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் இக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசாங்க சொத்துக்களை பயன்படுத்த உதவும் அரசாங்க உயர் அதிகாரிகளுக்கு எதிர் காலத்தில் இதற்கான முழு பொறுப்பை ஏற்க வேண்டி வரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு பயன்படும் வகையிலே அரசாங்க அதிகாரிகள் கடமையாற்ற வேண்டுமே தவிர அரசாங்க அமைச்சர்களின் நலனுக்காக அல்ல என தெரிவித்துள்ளார்.

# பிரேமா மரணம் குறித்து நீதிமன்றம் அறிக்கைகோரல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மரணம் தொடர்பாக சரியான திட்டவட்டமான அறிக்கை ஒன்றை சமர்பிக்கும்படி கொழும்புமாவட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் இரகசியப் பொலிசாருக்கு கடந்த புதனன்று பணிப்புரை விடுத்தது.

அப் பணிப்புரையில் மேலும் இத்தகைய ஓர் அறிக்கையை பகிரங்கமாக வெளியிடுவதில் இரகசிய பொலிசாருக்கு தயக்கம் இருக்குமாயின் இரகசிய அறிக்கையாக தாக்கல் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் வழக்கின் முதல் எதிரியான சமன்தஜிவ பாபு என்பவருடன் இணைந்து நடத்திய கடை ஏலத்தில் விற்கப்பட்டதன் மூலம் பெறப்பட்ட பணத்தை விடுவிக்கும்படியும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# பெயர்ப்பலகை திரைநீக்கம்

(தென்மராட்சி)

கொடிகாமம் ப. நெ. வள. அ. கூ. சங்கத்தின் கரம்பைக் குறிச்சி பாலர் பாடசாலை மெய்வல்லுநர் போட்டியும், மாவீரர் லெப். கி. நித்தி அவர்களின் பெயர்ப்பலகை திரைநீக்க விழாவும் வரணி செல்வா விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 1. 30 மணிக்கு இடம் பெறவுள்ளது (86)

# மண்ணெய் விநியோகம்

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கு தற்போது பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு நான்கு லீற்றர் மண்ணெய், லீற்றர் இருபத்தைந்து ரூபா விலையில் விநியோகிக்கப்படுகிறது (22)

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 08. 01

## பொருளியல்

**K** கட்டமைப்பு மாற்றங்கள்

பொருளாதார கட்டமைப்பு, ஏற்றுமதி, இறக்குமதிக்கட்டமைப்பு என்பது பற்றி கேட்கப்படும் போது ஒவ்வொன்றின் உட்பிரிவுகளினதும் சதவீதப் பங்கினைக் குறிப்பிடல் வேண்டும். கட்டமைப்பு மாற்றம் என கேட்கப்படுமிடத்து இரு காலப் பகுதிகளுக்கிடையில் சதவீதப் பங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் காட்டப்படவேண்டும். தரவுகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

**L** பொருளியல் எண்ணக்கரு

இனங்காண்க எனக் கேட்கப்பட்டால் சரியான எண்ணக்கருவை விடையில் குறிப்பிடாத விடத்து புள்ளிகள் பெறமுடியாமல் போகும்.

உ+ம் -குறிப்பிட்ட ஒரு விலையில் நுகர்வோர் எவ்வளவு பொருளையும் கொள்வனவு செய்யத்தயாராக உள்ளனர். விலை சிறிது உயர்ந்தால் கொள்வனவை முற்றாக நிறுத்துவர் இதற்குரியவிடையில் ''முடிவிலி கேள்வி நெகிழ்ச்சி'' எனக் குறிப்பிட்டு வரை படம் காட்டப்படல் வேண்டும்.

டுக. செய்முறைத் தாள்கள் விடையின் நம்பகத் தன்மையை பரீட்சகருக்கு உறுதிப்படுத்த உதவும். பின்னர் நேரம் இருப்பின் நிறுத்தச் சொல்லும் வரை எழுதுக.

12. விடையை சரிபார்த்தல்

விடை எழுதிய பின் போதுமான நேரம் இருப்பின் அதனை விரயம் செய்யக் கூடாது. முன்பு எழுதாத வினாவுக்கு விடை எழுத முயற்சிக்கலாம். எழுதிய விடைகளையும் வாசித்து வேண்டிய திருத்தங்களைச் செய்யலாம்.

V

## விசேட கவனத்திற்குரிய விடயங்கள்

மாணவர்கள் ஏற்கனவே கற்ற பாட விடயங்களில் இப்பகுதியில் குறிப்பிடப்படும் விடயங்கள் அண்மைக் காலத்தில் முக்கியம் பெற்ற விடயங்கள். ஆகையால் அவற்றில் கூடிய கவனம் செலுத்துவது நல்லது. இவற்றில் ஏதாவது ஒருசிலவற்றைத்தெரியாதவிடத்து பதற்றமடையத் தேவையில்லை. ஏனெனில் 12 வினாக்களில் 5 வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும்

## தமிழ்

பொருள்கொண்டவை. இவை ஒருமையிலும் வீடு எனவும் அன்பது வீடுகள் என பன்மையினையும் உணர்த்தியது' என்று எழுத வேண்டிய அவசியம் இல்லையாகும். விளக்கி உதரணம்தருக.? உதாரண விளக்கம் தருக.? என அமைகின்ற வினாக்களை நோக்கும் போது - உதாரணமாக பொருளாகு பெயரை விளக்கி உதாரணம் தருக என்றவினாவி அமையின் ''ஓர் குறித்த பொருளின் இயற்பெயர் அப்பொருளைக் குறியாதுஅதனோடு தொடர்புடைய பிறிதொரு பெயருக்காகி தொன்றுதொட்டு வழங்கி வருதல் பொருளாகு பெயராகும்.

உதாரணம்: தாமரை சூடினாள்.

இதில் தாமரை என்ற பொருட் பெயர் அதனைக் குறியாது, அதனோடு தொடர்புடைய பூவுக்காகி வந்துள்ளது என எழுத வேண்டியதில்லை. இவ்வாறு எழுதும் போது ''விளக்கி, உதாரணம் தந்து விளக்குக'' என்ற வினாவாக வழுவாக அமைந்த ஒரு நிலை ஏற்படும்.

இதே போன்று விளக்கி உதாரணம் தருக என்றுஅமையாதுவினா ''பொருளாகு பெயருக்கு உதாரண விளக்கம் தருக? என அமையும் போது விடையானது.

உதாரணம்- தாமரை சூடினாள்.

மும் சிலவேளையில் மாணவர் மத்தியில் எழுகின்றமையும் உண்டு. உதாரணமாக மொழி முதலில் அகநிலையாகவும் புறநிலையாகவும் வரு வினா எழுத்துக்களைக் குறிப்பிடுக? விடை ''எ,யா'' இவ்வாறு எழுதுவது போதாதோ என்ற ஐயத்தில் என்ன எங்ஙனம் யார், யாங்ஙனம் என்று விளக்கம் கொடுக்கமுனைவது நேரவிரயமாகும் எ. யா. என்றவிடை போதுமானது.

பகுதி இரண்டின் முதலாம் இரண்டாம் மூன்றாம் வினாக்களுக்கும் உள்ளிட்டு ஆறு வினாக்களுக்கு விடை தருக என்ற அடிப்படையில் முதலில்வரும் மூன்று வினாக்களுக்கும் 55 புள்ளிகளும் அடுத்த மூன்று வினாக்களுக்கும் 45 புள்ளிகளும் வழங்கப்படுகிறது இந்தவகையில் 4ஆம் 5ஆம் வினா இலக்கணப் பெரிய வினாக்களாகும் இவ் வினாக்களுக்கு விடை எழுதுவது கூடிய புள்ளியினை எடுப்பதற்கு வாய்ப்பேற்படும் நேரடியாக இலக்கணகாரரின் கருத்தை எழுதுவதற்கேற்ற தன்மையும் குறைந்த நேரத்திலே எழுதமுடியும் என்பதாலும் கூடியவரையில் இவற்றுக்கு விடையளிக்க முயற்சிக்க வேண்டும் இவ்வினாக்களில் '' தற்கால வழக்கு '' என்பதும் ஒரு முக்கிய பகுதியாக இருக்கும் வினாக்களும் உண்டு அவ்வாறாயின் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்

பேச்சே ஆகும்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியினரோ தாம் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினையைத் தீர்த்தே தீருவோம் என்று சவால்விட்டு வருகின்றனர். இவர்களின் இவ் அறிவிப்பானது வரவேற்கத்தக்கதாயினும் இனப்பிரச்சினைத் தீர்வு எந்தளவு கடினமானது என்பதை இவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இல்லாது போனால் நெருக்கடியானதும் சிக்கலானதுமான இ பிரச்சினையை சுலபமாகத் தீர்த்துவிடலாம் என்ற தொனியில் பேசமாட்டார்கள்.

ஆனால் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஏற்படும் தடைகளை இவர்களால் தாண்டிச் செல்ல முடியுமா? என்பதே முக்கிய கேள்வியாகும். ஏனெனில் பொதுஜன ஐக்கிய முன்னணி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்போடு செய்து கொண்ட சாதாரண தேர்தல் உடன்பாடு குறித்து சந்தேகம் எழுந்த போது அதனை போக்குவதற்காக பௌத்த பீடங்களுக்கு விளக்கம் அளித்து அவர்களைத் ‘தாஜா’பண்ண வேண்டிய நிலையிலேயே பொ.ஐ. முன்னணியும் உள்ளது.

இந்நிலையில் அரசியற்கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளில் மக்கள் எந்தளவிற்கு நம்பிக்கை கொள்வது என்பதே கேள்வியாகும். இலவச அரிசிதருகிறோம். பாணின் விலையைக் குறைக்கின்றோம், வேலை வாய்ப்பு தருகின்றோம், வேலை வாய்ப்பு இல்லாதுவிட்டாலும், மாதாந்தம் வேலையில்லாதோருக்குச் ‘சம்பளம்’ தருகிறோம் என்பதெல்லாம் இதற்கு முன்னரும் கூறப்பட்ட வாக்குறுதிகள் தான், இதில் சிறியளவிலானது நிறைவேறியதும், அநேகமானவை நிறைவேற்றாமலும் போனதுண்டு. ஆகையினால் இது குறித்து சிறிய அளவிலாயினும் நம்பிக்கை கொள்ளலாம்.

இவ்வாக்குறுதிகள் சிலவற்றை ஆட்சிக்கு வருபவர்கள் அமுல்படுத்தும் போது எதிரணியினரும் எதிர்க்க முடியாதும் போகலாம். ஆனால் மாகாண சபையை தமிழ் மக்கள் நிராகரித்த போதும், மாவட்ட சபையே பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானது எனக் கருதும் தினேஷ் குணவர்த்தனா போன்றவரும், தமிழ்க்கட்சிகளுக்கு தேர்தலுக்காக வாக்குறுதிகளை வழங்கிவிடாதீர்கள் என எச்சரிக்கும் பௌத்த சங்கங்களும் இருக்கும் போது இவ் அரசியற்கட்சிகள் எவ்வாறு அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றன. பேச்சிற்குக் கூறப்பட்ட வாக்குறுதிகள் தானே என்ற நிலைப்பாடு காரணமாக இருக்குமா?

---

ழ்ச்சி’ எனக் குறிப்பிட்டு வரை படம் காட்டப்படல் வேண்டும்.

**M இடைவெளி நிரப்புதல்**

கேள்வி நெகிழ்ச்சி, தேசிய வருமானம், வ. செ. திட்டம், செல்மதி நிலுவை போன்ற பாட அலகுகளில் இத்தகைய வினாக்கள் இடம் பெறுகின்றன வினாவிற்குரிய இலக்கத்தை எழுதி இடைவெளியில் வரவேண்டிய சொற்களை மட்டும் எழுதினால் போதும்.

**N பங்களிப்பைக் கூறுக**

இத்தகைய வினாவிற்கு ஒவ்வொன்றினதும் ‘‘சார்பு ரீதியான சதவீதப்பங்கு’’ என்பதைக் குறிப்பிடுதல் போதுமானது.

**O பட்டியலிடுக / நிரல்படுத்துக**

இத்தகைய வினாக்களிற்கு இலக்கமிட்டு ஒன்றின் கீழ் ஒன்றாக குறிப்பிடல் வேண்டும்.

**P காரணங்கள் தந்து விளக்குக**

ஒவ்வொரு காரணங்களையும் குறிப்பிட்டு அவை பற்றி சுருக்கமான விளக்கமும் அதன் கீழ் கொடுக்கப்படல் வேண்டும்.

**Q ஒரு இலக்கத்தில் இரு வினாக்கள்**

கேள்வியை வாசிக்கும் போதே இரண்டாவது பகுதி வினாவிற்கு கோடிடுவதன் மூலம் அவ்வினாவுக்கு தவறாது விடையளிக்க முடியும்.

**11. வினாத்தாளை இணைத்தல்**

பரீட்சை நேரம் முடிவடையப் 10 நிமிடங்களுக்கு முன்பு விடைத்தாள்களை ஒழுங்குபடுத்தி வினாவுக்குரிய அதன் உப பிரிவுக்குரிய இலக்கங்கள் சுட்டெண், பக்கங்கள், வரைபடங்கள் என்பவற்றைச் சரிபார்த்து, ஒரு சில தாள்களை மேலதிகமாகச் சேர்த்து, இறுதியில் செய்முறைத்தாள்களிருப்பின் அவற்றையும் சேர்த்து ஒழுங்காக நூலிட்டுக் கட்டுக்களில் 5 வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும் ஆனால் குறிப்பிட்ட சில பாட அலகுகளை மட்டும் தெரிவு செய்து கற்கும் மாணவர்கள் அந்த அலகுக்குரிய விடயங்களை அறிந்து கொள்வது நல்லது.

**பொருளியல் I**

1. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்
2. நாணயத்தளம், பணப்பெருக்கி
3. 1993இல் அரச ஊழியரின் உண்மைக்கூலிகள் 9.5% அதிகரித்தமை.

**பொருளியல்(II)**

1. 1994 வ. செ. திட்ட ஆலோசனைகள்.

2. 1994 மேதினக் கொண்டாட்டத்தில் இலங்கை அரசாங்கம் வ.செ. திட்டத்திற்குப் பின் வழங்கிய நிவாரணங்கள்.

3 சேர்க்கப்பட்ட பெறுமதிமீதானவரி (VAT)

4. உலகவர்த்தக அமைப்பு World Trade Organization WTO)

5. 200 ஆடைத்தொழிற்சாலை நிகழ்ச்சித்திட்டம்.

6. எக்ஸ்போ-92 வர்த்தகக் கண்காட்சி.

7. பதினையாயிரம் கிராமியத்திட்டங்கள்.

8. பதினைந்து இலட்சம் வீடமைப்புத் திட்டங்கள்.

9. சனசக்தித்திட்டம்.

10. மக்கள் மயமாக்கல்.

11 கணனிகளின் பயன்பாடு மனிதவளசக்திப் பயன்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம்.

12 திறந்தபொருளாதாரக்கொள்கையின் விளைவுகள்.

13. பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு (மொ. உ. உற்பத்தி வீதம் 1983 இற்குமுன்பு 1% இற்கு குறைவு 1993 இல் 4% மொத்த அரசசெலவில் 17% )

14. 1989 இல் தொடக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய சீராக்க நிகழ்ச்சித் திட்டம்.

15 பின்வரும் நிலைமைகளுக்குரிய காரணிகள்:

(A) 1981- இன் பின் முதன் முறையாக சென்மதி நிலுவையின் சேவைகள் கணக்கு மிகையைக் காட்டியுள்ளது.

(B) 1989-1993 காலப் பகுதியில் வெளிநாட்டுப் படு கடன் பணிவிகிதம் 24.6 இலிருந்து 13.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

(C) வரி அரசிறையில் உள்நாட்டு பொருள்கள் பணிகள் மீதான வரிகளின் பங்கு 1993 இல் 55% மாக அதிகரித்துள்ளது.

(D) 1993 இல் சம்பளங்கள் கூலிகள் மீதான அரச செலவு 25% அதிகரித்துள்ளது.

(E) மத்திய வங்கியிடமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி வருமானம்

1991---3033 மில் ரூபா

1993—1073 ’’ ’’

என வீழ்ச்சியடைந்துள்ளது.

பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

‘‘முயற்சி திருவினையாக்கும்

---

உதாரணம்- தாமரை சூடினாள்

விளக்கம் -தாமரை என்ற பொருள் முதன் பெயர் அதனைக் குறியாது அதனோடு தொடர்புடைய பூவைக் குறித்து நின்றமையால் பொருளாகு பெயராயிற்று. என்று அமைதல் வேண்டும், மாறாக ‘‘பொருள் சினைக்காகி வந்துள்ளது’’ என்றோ, வேறு ஒரு பொருளாகு பெயர் தொடர்புக்கு -தாமரை சூடினாள் என்பதற்கு மல்லிகை சூடினாள் என்ற விளக்கம் அமைத்தல் விளக்கம் கூறி இது போன்றதே இதுவும் எனக் கூறுவதையோ தவிர்த்தல் வேண்டும். மேலும் இப்பகுதியில் குறித்த வினாவிற்கு விடை போதுமோ என்ற ஐய

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மரபிலக்கணக்காரர் கூறியவற்றுக்கும் இன்றைய இலக்கியங்களில் அது மீறப்படுகின்ற நிலைகளும், அதற்கான காரணங்களும் பற்றி தெளிவாக அறிந்து வைத்திருத்தல் அவசியம். இப்பகுதி தெளிவில்லாத ஒரு நிலையிருப்பின் நேரடியாக இலக்கிய வரலாற்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

இலக்கிய வரலாற்றில் இலக்கணப் பெரியவினா எழுதாத சந்தர்ப்பத்தில் மூன்று வினாக்களை விடையளிப்பதற்கு தயாராக வேண்டும். இதிலே முற்பகுதிக்காலங்களுக்கு உதாரணமாக சங்க /சங்கம் மருவிய காலப்பகுதி வினாக்களுக்கு விடையளிப்பதாயின் ஒரு இலகுத்தன்மை தெரியும் இதிலே சோழர், நாயக்கர் காலம் போன்று இலக்கியப் பரப்பளவு வரையறைகளோடு காணப்படுவதால் விரைவாக விடை எழுதக் கூடியதாக இருக்கும். நாயக்கர் காலத்தில் அதன் பரப்பும் வகைமையும் அதிகமாக இருப்பதால் கடைசி வினாவாக அதனை எழுதுவதற்கேற்ப முற்பகுதியில் இருந்து நேரத்தினை மீதப்படுத்த எத்தனிக்க வேண்டும்.

இலக்கிய வரலாற்றுக் கேள்விகளை அணுகும் போது அவை முன்பின்னாக காலங்களோடு தொடர்பு படுத்தப்பட்ட வினாக்களாக இருந்தால் அதனைப் பற்றிய கால வரையறையினை விடையிலே முதலில் குறித்துக் கொள்ளல் அவசியம் அதன் மூலம் அப்பகுதிக்கான விடையினைப் பூரணப்படுத்த வேண்டும். மேலும் இலக்கிய வரலாற்று வினாக்கள் அ ஆ இ என்று பகுதிகளாகப் பிரித்து காணப்படும் போது அதற்கு சம புள்ளிகள் என்று கருதக் கூடாது.

உதாரணமாக- அ) சங்ககால நூல்களைக் குறிப்பிட்டு அவற்றை அகம்புறம்என்றுபாகுபடுத்துக.

ஆ) அன்பின் ஐந்திணையினை விளக்கிக் கூறுக.

இ) அகத்திணை சாராத பண்புகளைச் சுருக்கமாகத் தருக.

மேற்கூறிய வினா அமைப்பில் ஆ வான்ன பகுதிக்கு அதிக விடையும் அதற்கு கூடிய புள்ளியும் இருப்பதை உணர்ந்து அதற்கேற்ப விடையளித்தல் வேண்டும்.

எந்த ஒரு வினாபத்திரத்திலும் இருப்பது போன்று முதலில் முதலாம் வினாவுக்கும் இறுதியில் இறுதிவினாவிற்கும் விடையெழுத வேண்டும். என்ற நியதி இல்லை. மிக இலகுவான வினாவிற்கு முன்னுரிமை கொடுத்து அதனை விரைவாக எழுதி நேர வரையறையினைக் கவனத்தில் கொள்ள வேண்டும் நீங்கள் எழுதிய விடைத்தாள்களை பரீட்சகர் வாசிக்கக்கூடிய விதத்தில் இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

---

**1994. 08. 01**

**திங்கள் இரவு**

- 08. 01 - சிறப்பு நிகழ்ச்சி ‘ஆகாய கடல் வெளி நடவடிக்கை’’
- 08. 30 - செய்திகள்
- 08. 40 - தரிசனம் ‘‘தமிழீழத்தில் புகழ் பூத்த புல்லாங்குழல் இசைக்கலைஞர் அருணாசலம் நமசிவாயம் அவர்களுடனான செவ்வி’’

**1994. 08. 02**

**செவ்வாய் காலை**

- 07. 02 - மாவீரவணக்கம்
- 07. 15 - இன்றைய தாரகை
- 07. 30 - செய்திகள்
- 07. 35 - பத்திரிகைச் செய்திகள்
- 07. 40 - தாயகப் பாடல்கள்.

# போராட்ட காலத்தில் கல்லூரி பெற்ற விழுப்புண்கள் இன்னமும் மாறவில்லை

## யாழ். மத்திய கல்லூரி விழாவில் இளங்குமரன் உரை

''இந்தக் கல்லூரி எமதுவிடுதலைப் போராட்ட வரலாற்றிலே ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவைப் பெற்றுள்ளது. இந்தக் கல்லூரிச் சூழலிலே எதிரிகளின் படை முகாம் யாழ். கோட்டையிலே அமைந்திருந்தபோது போராட்டம் நடந்த காலங்களிலே இந்தக் கல்லூரி தாங்கி இருக்கின்ற விழுப்புண்கள் இன்னும் மறைந்துவிடவில்லை. போர் வீரன் களத்திலே பட்ட விழுப்புண்கள் பற்றி பெருமை கொள்வான். அதே போன்று இந்தக் கல்லூரிக் கட்டடமும் இடிபடாத இடமே இல்லை. அது விடுதலைப் போராட்டத்திலே மாணவர் கட்கு ஒரு சிறப்பான படிப்பினையைக் கொடுக்கக் கூடிய நிலையில் விழுப்புண்ணைத் தாங்கி இருந்து கொண்டிருக்கிறது''

இவ்வாறு யாழ். மத்திய கல்லூரியின் 175வது வருட நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இந்த விடுதலைப் போராட்டம் 90ஆம் ஆண்டின் பின்ஒரு திருப்பு முனையை அடைந்த தன் பின் இந்தக் கோட்டையில் இருந்து சிங்கள இராணுவம் முற்றாக விரட்டி அடிக்கப்பட்ட காலம் வரை இந்த போராட்டத்திலே பல நூறு வீரர்கள் வீரச்சாவை தழுவி இருக்கின்றனர் என்பதை இங்கே கல்வி பயில்கின்ற மாணவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இந்தக் கோட்டையில் இருந்து சிங்கள இராணுவத்தை விடுதலைப் புலிகள் விரட்டி அடித்த அந்த வரலாற்றை, விரட்டி அடிப்பதற்காக இயக்கம் கொடுத்த விலையை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த போராட்ட வெற்றியின் மூலம்தான் கோட்டையில் இருந்து சிங்கள இராணுவம் அகற்றப்பட்டது. இதனால் இன்று இந்தப் பாடசாலை, பல பாடசாலைகள் இடம் பெயர்ந்துபோய் விழுந்து இருக்கின்ற நிலையிலும் கூட இந்த இடத்திலே இந்தக் கல்லூரி தலைநிமிர்ந்து பெருமையுடன் நிற்கின்ற தன்மையை நாம் பார்க்கின்றோம் என்பதை மறந்து விடக் கூடாது என்றார்.

அவர் மேலும் உரையாற்றும் போது, தமிழீழத்தைப் பொறுத்த வரையிலே கல்வித் தரம் கடந்த காலத்தில் சற்று இறங்கு முகமாகச் சென்றதுண்டு. அது இப்போது ஏற்பட்டுள்ள புதிய மறுமலர்ச்சி, புத்துணர்ச்சியின் மூலம் மீண்டும் ஓர் ஏறுநடை போடுகின்ற நிலைக்கு வந்திருக்கின்றது. இந்த நிலையிலே இந்தக் கல்லூரியின் 175-வது ஆண்டு கால பணியைநினைவு கூர்ந்து ஒருவிழாவைக் கொண்டாடுகின்ற நாம் மாணவர்கள் பாடசாலையின் மீது தாம் பயில்கின்ற கல்விக்கூடத்தின் மீது தமக்கு கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களின் மீது அதிபர்களின் மீது எவ்வளவு தூரம் பற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். பாடசாலை கற்பித்தலிலே தம்மை வளர்த்துக் கொள்ள முடியும். தமது கல்வி அறிவை பெருக்கிக்கொள்ள முடியும் என்கின்ற நிறைவான நம்பிக்கையை மாணவர்கள் பெற வேண்டும் சிறந்த வகையிலே இந்தக் கல்லூரிகள் செயற்பட வேண்டும். எமது இயக்கம் கல்வி வளர்ச்சியை தமது கடமைகளில் ஒன்றாக எடுத்துள்ளது. அது தேவையான ஒத்துழைப்பை வழங்கும். இந்தக் கல்லூரி மேன்மேலும் வளர வேண்டும் என்றார். (சி)

# விமரிசையாக நடைபெற்ற 175 ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் 175 - ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த இந்த விழாவிற்கு கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர்எஸ்.பிஆர்.சீர்மாறன் தலைமை தாங்கினார்.

யாழ். முனியப்பர் கோவிலில நடைபெற்ற விசேட பூசையையும், யாழ். மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையையும் அடுத்து விழா ஆரம்பமானது.

மங்கள இசை முழங்க தேசிய கீதம் இசைக்க தேசியக் கொடியை திரு. வே. இளங்குமரன் அவர்கள் ஏற்றி வைக்க கல்லூரிக் கொடியை கல்லூரி அதிபர் திரு. நா. சண்முகநாதபிள்ளை அவர்களும், பழைய மாணவர் சங்கக் கொடியை பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறனும் ஏற்றினர்.

அடுத்து கல்லூரி பெயர் வளைவு திரை நீக்கம் செய்யப்பட்டது. பின் 175 -ஆவது ஆண்டு நிறைவு மண்டப அடிக்கல் கலாநிதி என். எதிர்

## மோட்டார்

செயல்படும் அலுவலகங்களில் வரி அட்டைகள வழங்கப்படமாட்டாது.

வரி அட்டையினைப் பெற வரும் ஊர்தி உரிமையாளர்கள் ஊர்திகளுக்கான தமிழீழ பதிவுப் புத்தகம், பாவனையில் இல்லாத ஊர்திகளாயின் அவை பதிவு செய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு, 93-ம் ஆண்டின் வரி அட்டை என்பவற்றுடன் தத்தமது குடும்ப அட்டையையும் தவறாது கொண்டுவருதல் வேண்டும்.

94-ம் ஆண்டிற்கான ஊர்திகளின் வரி அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான கால எல்லை இம்மாதம் 20-08-94 வரை என்பதையும் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்

சண்டிலிப்பாய், சங்கானை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் சங்கானை அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும்,

தீவகக் கோட்டத்திற்குட்பட்ட உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தீவக மக்களுக்கான அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும்,

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவையும், பளைப் பகுதியையும் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் சாவகச்சேரி அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும்,

கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த

துணைப்படை வீரர்

# வீரச்சாவு

வவுனியா பூம்புகார் சாட்டுப் பகுதியில் கடந்த மாதம் 29-ம் திகதி வெள்ளியன்று மாலை 3 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை அடைக்கலம் இராசலிங்கம் (பூம்புகார், வவுனியா) என்ற துணைப்படை வீரருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.



வீரவேங்கை அடைக்கலம் இராசலிங்கம்

# 45 மகாவலி வாகனங்களில் காமினி தேர்தல் பிரசாரம்

கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் காமினி திசாநாயக்கா மகாவலிச் சொத்துக்களை தனது தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக பயன்படுத்தி வருகிறார்.

மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான 45 வாகனங்களை காமினி பயன்படுத்தி வருகிறார்.

இவ் வாகனங்களின் சாரதிகளுக்கு ஒவ்வொருவருக்கும் 5000 ரூபா சம்பளப் பணமும் காமினியால் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு லீவுகள் வழங்கவும் பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யார் தோல்வியுற்றாலும் வீட்டில் ஒருவர் மொட்டை

(கொழும்பு)

தேர்தல் சூடு பிடித்திருக்கும் வேளையில் ஒரு தம்பதிகள் விசித்திரமான பந்தயமொன்றைப் பிடித் திருக்கின்றனர்

விவசாயத் தம்பதியரான இவர்கள் தமது தொகுதியில் எக்கட்சி வெற்றிபெறும் என்பது குறித்தே பந்தயம் பிடித்துள்ளனர்-

முன்னணிவேட்பாளர் வெற்றி பெற்றால் தான் மொட்டை அடிப்பதாக மனைவியும் பந்தயம் பிடித்துள்ளனராம். இவ்வாறு கொழும்பு வாரப் பத்திரிகையொன்றுகூறுகிறது-

# உலகிற்கே முன்னுதாரணமாக எமது போராட்டம் திகழ்கின்றது

## கொடிகாமம் அஞ்சலி நிகழ்வில் இளம்பரிதி

(கொடிகாமம்)

''எமது விடுதலைப் போராட்டம் இன்று உலக அரங்கில் நடைபெறும் போராட்டங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. அத்துடன் எமது போராட்ட வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் வல்லரசுகள் ஒதுங்கிக் கொண்டுள்ளன.'' இவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவுச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று கொடிகாமத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு, இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது இன்று உலகின் போக்கைத் தீர்மானிப்பது அணுகுண்டல்ல, மனோபலம் தான் உலகின் போக்கைத் தீர்மானிக்கின்றது. உலகிலேயே எம்மிடம் மனோபலம் அதிகமாகவே உள்ளது.

எம்மிடம் சரியான தீர்க்க தரிசனமுள்ள தலைமை உள்ளது. அத்துடன் மனோபலமும் உள்ளது. இதனுடன் மக்களது எழுச்சியும் இணைந்தால் எதிரியை அழித்தொழிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மண்டைதீவு மோதலில் 3 போராளிகள் வீரச்சாவு



லெப். கலைஞன்



லெப். குமரேசன்

மண்டைதீவுப் பகுதியில் கடந்த மாதம் 27-ம் திகதி புதனன்று, சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.



2-ம் லெப்.ஜெகநாதன் (பசீர்)

வீரச்சாவடைந்த லெப். கலைஞன் (குணவீரசிங்கம் மதனகுமார், மட்டுவில் தெற்கு சாவகச்சேரி), லெப். குமரேசன் (வேலாயுதம் சிவகரன், ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி, கிளிநொச்சி) ஆகிய இருபோராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

★ ★

மண்டைதீவுப் பகுதியில் கடந்த மாதம் 28-ம் திகதி வியாழனன்று சிறிலங்காஇராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத்தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த 2-ம்லெப் ஜெகநாதன்/பசீர் (பிரான்சிஸ் சேவியர் ரெஜினோல்ட், எழில் நகர் ஆஸ்பத்திரி வீதி, மன்னார்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# சர்வசன வாக்கெடுப்பு நடத்தி

வரை என்பதையும் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு அறியத் தருவதுடன் கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்களில் ஊர்திகளுக்கான வரி அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் அத்தியடியில் அமைந்துள்ள அலுவலர்க்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும் (யாழ். மத்திய பேரூந்து நிலையத்திற்கு அருகில்)

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும்,

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் பருத்தித்துறைவீதி நீர்வேலியில் அமைந்துள்ள அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும்,

உடுவில், தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் சுன்னாகம், அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும்,

கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் மாலுசந்தியில் அமைந்துள்ள அலுவலர்க்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும்,

பருத்தித்துறை, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஊர்தி உரிமையாளர்கள் பருத்தித்துறை இறங்குதுறை சோதனை நிலையத்திலும் 94-ம் ஆண்டிற்கான வரி அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும், வார நாட்களில் காலை 8-30 தொடக்கம் பி.ப 2.00 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை 8.30 தொடக்கம் பி.ப 1.00 மணி வரையும் மேற்குறிப்பிட்ட அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதையும், மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்பதையும் மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் கவனத்திற்கு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

# மரண அறிவித்தல்

## ஸ்ரீபன் மகேந்திரா போல்

## (S. M. PAUL)

ஸ்ரீபன் மகேந்திரா போல் 28-7-94 வியாழக்கிழமை காலமானார். ஞாயிற்றுக்கிழமை 31-7-94 இல் நடைபெறஇருந்த இவரது இறுதிச் சடங்கு இன்று திங்கட் கிழமை1-8-94 மாலை 4 மணிக்கு யாழ். மரியன்னைப் பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியோடு நடைபெறும்.

தகவல்:

51/1 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ். ஏ. போல்
(8987)

ஆண்டு நிறைவு மண்டப அடிக்கல் கலாநிதி என். எதிர் வீரசிங்கம் அவர்களால் நாட்டப்பட்டது. அடுத்து சரஸ்வதி சிலையை நல்லை ஆதீன குரு முதல்வர் திரைநீக்கம் செய்தார். பழைய மாணவர் சங்க அலுவலகத்தை பேராசிரியர் வி. நவரத்தினராசா அவர்கள் திறந்து வைத்தார். (சி)

## தேர்தல்

காணிப்பு இல்லாத பட்சத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலை சுதந்திரமாக நடாத்துவது சாத்தியமற்றது என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## ஐ. தே. க

இவர்தனது கொள்ளுபிட்டி இல்லத்தை விற்பனை செய்ய தற்போது நடவடிக்கை எடுத்துவருகிறார் என யுக்திய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## ஆணையிறவு

ப்பாளர் தணிகைச் செல்வி போராளிகள் பயிற்சி பள்ளி பொறுப்பாளர் மனோ, இளம் பரிதிஆகியோர் உரையாற்றினார்கள். (86)

## கூட்டுறவு

கொழும்பு சென்றவர்கள் பொருள் கொள்வனவு செய்து வடபகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு யாழ். அரசாங்க அதிபரிடம் கப்பல் வசதி ஏற்பாடு செய்து தரும்படி கோரியுள்ளனர்.

இதன் காரணமாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பொருள் விநியோகம் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## உணவு

ண்டு வந்தபோதிலும் அவற்றிற்கான பணம் இதுவரையும் சங்கங்களுக்கு வழங்கப்படவில்லை உதாரணமாக வெள்ள நிவாரணம் போன்றவை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (தி)

என்பது குறித்தே பந்தயம் பிடித்துள்ளனர்-

தமது தொகுதியில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றால் தான் மொட்டை அடிப்பதாக கணவனும் பொது ஜனஐக்கிய

## ஈ. பி. டி. பி.

காபந்து அமைச்சரவையிலுள்ள 90 அமைச்சர்களைத் தவிர ஏனையோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப் பெறப் போவதாகவும் கூறினார்.

ஈ. பி. டி. பியினர் ஆயுதங்களை வைத்திருப்பது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குக் குந்தகமானதுஎனஏனைய தமிழ்க் குழுக்கள் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

## வன்செயல்

சட்ட அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படுகின்றன. ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுகிறார்கள், இதனால் வன்செயல்கள் தலை தூக்கலாம், தேர்தல் நீதி நியாயமாக நடைபெறாதெனவும் எதிர்பார்க்கலாம் என அவர் கூறினார்.

இதேவேளை, ஓய்வுபெற்ற படைவீரர்கள் சேவைக்கு அழைக்கப்படுதல் வழமையான நடவடிக்கை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

தேர்தல் காலத்தில் கண்டி பெரஹறாவும் நடைபெறவுள்ளதால், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அதிக ஆட்கள் தேவையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வன்னி

பாக்கிகளை எடுத்துச் சென்ற நபர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதேவேளை வன்னியில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி முறையை ஒழிப்போம்

## - சந்திரிகா குமாரணதுங்கா தெரிவிப்பு

எமக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிடினும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி நிச்சயம் ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்

ஹொரணையில் தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் தனிஒருவருக்கு ஜனாதிபதி பதவி மூலம் நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது இந்நாட்டிற்கு பொருத்தமானதல்ல. இதனால் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் நன்குணர்ந்துள்ளனர் என்றார்,

# திருமலை எல்லைகிராமங்களிலிருந்து பெருமளவு தமிழர் வெளியேற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட எல்லை தமிழ் கிராமங்களில் இருந்து பல நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களைநோக்கி இடம் பெயர்ந்துகொண்டு இருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தலைத்தொடர்ந்து அப்பகுதியில் இனம்புரியாத ஓர் பதற்றநிலை நிலவுவதாகவும் இங்கு அடிக்கடி இராணுவத்தினரும் பொலிசாரும் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொள்வதாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

இதே வேளை திருகோணமலை நகரப்பகுதியில் பிரதான பாதைகளில் வீதிதடைகள் போடப்பட்டு கடுமையான சோதனை நடைபெறுவதாகவும் வெளிபகுதியைச் சேர்ந்தவர்கள் புதிதாக உள்ளே வருவது தடைசெய்யப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

## ஆயுதம்

நிருபர் ஒருவர் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழுள்ள தீவுப்பகுதிகளில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை. ஈ.பி.டி. பியும், ஆளும் ஐ. தே. கவுமே ஆட்சி நடத்துகின்றன என்று கூறினார்.

## தேர்தல்முடிவு

விட்டன என பிரித்தானிய விமான நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்- தேர்தலுக்கு சில நாட்கள் முன்னதாக அல்லது பின்னதாக அவர்கள் புறப்பட பதிவுசெய்துள்ளனர் என அம்முகவர் தெரிவித்ததாக சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது-

# தேர்தல் கண்காணிப்புக்கு நியமிக்கப்பட்டோர் விபரம்

ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் அமைத்துள்ள தேர்தல் கண்காணிப்பு குழுவில் இடம்பெறவுள்ள முன்னாள் அதிகாரிகளின் பெயர்கள் வெளிவந்துள்ளன.

இதன்படி முன்னாள் பொலிஸ் மா அதிபர்கள் அனா செனவிரத்ன, ருத்ரா ராஜசிங்கம், ஏயர் வைஸ் மார்ஷல்களான ஹரி குணதிலக, படிமெண்டிஸ், ரியர் அட்மிரல்களான பசில் குணசேகர, அல்பிரட் பெரேரா பிரிகேடியர்களான செசில் கல்தெரா, ஹென்றி அத்துக்கொரள, கிரேசன் சில்வா உட்பட கேணல், மேஜர், ஸ்குவாட்ரன் லீடர், லிங் கொமாண்டர், டிஐஜி, தரத்திலான அதிகாரிகளும் இக்கண்காணிப்புக் குழுவில் இணைந்துள்ளனர்.

# 13 கொலைகள் செய்தவரை விடுவிக்க சிபார்சு

பதின்மூன்று கொலைக் குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவித்து வரும் ஒருவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாக தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து இவர் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் இதற்கு ஒரு சிரேஷ்ட அமைச்சர் பின்னணியில் செயற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது